தமிழ்நாடு அரசு

# மூன்றாம் வகுப்பு

# தமிழ்

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

www.cbsetamil.com

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – *2019*

திருத்திய பதிப்பு – *2020, 2022, 2023*

மறுபதிப்பு – *2021, 2024*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

**விலை : ரூ.**

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



www.CBSETAMIL.com

# முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்கண்ட நோக்கங்களை அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.


www.CBSETAMIL.com

www.cbsetamil.com

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

# நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!





www.CBSETAMIL.com

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



www.CBSETAMIL.com

www.cbsetamil.com

# தமிழ்

## மூன்றாம் வகுப்பு





www.CBSETAMIL.com

# முன்னுரை

**குழந்தைகள் அற்புதமானவர்கள்!**

அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர். எல்லாக் குழந்தைகளும் தனித்திறன் என்னும் முத்துகளைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள். அச்சிப்பிகளுக்குள் பொதிந்து கிடக்கும் திறன்களாகிய முத்துகளைக் கண்டு வெளிக்கொணர்வதே உண்மையான கல்வி.



இதுவரை கற்றுணர்ந்த அடிப்படை மொழித்திறன்களை நினைவுகூர்ந்து வெளிப்படுத்தும்வகையில் 'வா வா முயலே!' என்கிற தலைப்பில் ஆர்வமூட்டும் செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.




இப்பாடநூல் தமிழையும் தமிழர்களையும் போற்றும்வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி, சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் குழந்தைகளின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணப்படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

தங்கள் ஆசிரியர்களோடு குழந்தைகள் தயக்கமின்றிக் கலந்துரையாடுவதற்கான பகுதியாகச் சிந்தித்துப் பேசலாமா? பகுதி அமைக்கப்பட்டுள்ளது.




கருத்தை வெளிப்படுத்துவது பேச்சு. எனவே பேச்சுவளத்தை மேம்படுத்தும் சூழல்களும் வழிகாட்டுதலுடன் கூடிய பேசுவதற்கான வாய்ப்புகளும் அதிகம் வழங்கப்பட்டுள்ளன.







www.cbsetamil.com

பாடநூல் பயிற்சிகளாக,
- பாடத்துடன் தொடர்புடைய பயிற்சிகள்
- மொழி விளையாட்டுகள்
- திறன் சார்ந்த பயிற்சிகள்

ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.





ஒவ்வொரு குழந்தையின் படைப்புத்திறன், புதியன உருவாக்கும் சிந்தனை ஆகியவற்றை வளர்க்க உதவும் **கலையும் கைவண்ணமும்** பகுதி இடம்பெற்றுள்ளது.

திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் **செயல்திட்டம்** அளிக்கப்பட்டுள்ளது.






புதிய செய்திகளைக் குழந்தைகள் அறிந்துகொள்ள உதவும்வகையில் **அறிந்துகொள்வோம்** பகுதி அமைந்துள்ளது.

செயல்பாடுகளாக,
ஆசிரியரோடு இணைந்து கற்கும் பகுதி
இணைந்து குழுவினராகச் செயல்படும் பகுதி
தனியே செய்து முடிக்கும் செயல்பாடுகள்
மதிப்பீட்டுச் செயல்பாடுகளுக்கான பகுதி
ஆகியன இடம்பெற்றுள்ளன.

புதிய பாடநூலில் இவைபோன்ற செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

கற்பிக்க வேண்டிய திறன்கள் அந்தந்தப் பாடப்பகுதியிலும் பெறவேண்டிய கற்றல் விளைவுகள் பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப்பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும்
இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும்
ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த
சமூகம் அமையட்டும்.

வாழ்த்துகள்..!

ஆக்கியோர்.




www.CBSETAMIL.com

# பொருளடக்கம்


| வ. எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | வா வா முயலே! | 1 |
| 2 | செய்து மகிழலாம் | 10 |
| 3 | கண்ணன் செய்த உதவி | 16 |
| 4 | நமது நண்பர் | 21 |
| 5 | மாட்டு வண்டியிலே... | 26 |
| 6 | டும்... டும்... சின்னு | 32 |
| 7 | தனித்திறமை | 37 |
| 8 | இறகு யாருடையது? | 44 |
| 9 | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | 50 |
| 10 | சான்றோர் மொழி | 55 |
| 11 | காட்டில் திருவிழா? | 60 |
| 12 | கொழுக்கட்டை ஏன் வேகல? | 65 |
| 13 | எழில் கொஞ்சும் அருவி | 70 |
| 14 | கல்வி கண் போன்றது | 75 |
| 15 | வீம்பால் வந்த விளைவு | 80 |
| 16 | நூலகம் | 85 |
| 17 | நாயும் ஓநாயும் | 92 |
| 18 | திருக்குறள் கதைகள் | 96 |
| 19 | முடிவெடுப்போமா? | 106 |
| 20 | தூக்கணாங்குருவியும் ஒட்டகச்சிவிங்கியும் | 109 |
| 21 | உள்ளங்கையில் ஓர் உலகம் | 115 |
| 22 | நட்பே உயர்வு | 119 |
| 23 | துணிந்தவர் வெற்றி கொள்வர் | 124 |
| 24 | மழைநீர் | 130 |
| 25 | தமிழ்மொழியின் பெருமை | 136 |
| 26 | அறிவூட்டும் தொலைக்காட்சி செய்திகள் | 141 |
| 27 | நல்வழி | 145 |


மின் நூல்

மதிப்பீடு


www.CBSETAMIL.com

# 1 வா வா முயலே!

என் நினைவில்

## வா வா முயலே!

குட்டி குட்டி முயலே
குதித்து ஓடும் முயலே
சின்னஞ் சிறிய முயலே
சிரித்து வா வா முயலே

பட்டு பட்டு முயலே
பஞ்சு வண்ண முயலே
கிழங்கும் பழமும் தந்திடுவேன்
கிட்ட வா வா முயலே

அன்பாய் நாமும் பழகலாம்
ஆற்றுநீரில் குளிக்கலாம்
கொட்டும் மழையில் நனையலாம்
குதித்து ஆட்டம் போடலாம்

பட்டம் விட்டுப் பார்க்கலாம்
பம்பரம் நாமும் சுற்றலாம்
ஊரைச்சுற்றிப் பார்க்கலாம்
ஊஞ்சல் ஆடி மகிழலாம்



# கொண்டாட்டமாம் கொண்டாட்டம்!



## படம் பார்த்துப் பேசுவோம்



பிடித்த விளையாட்டுகளின் அருகிலுள்ள நட்சத்திரங்களுக்கு வண்ணமிடுங்கள்.

# விளையாடி மகிழ்வோம்

## நடப்போம் நடப்போம்

- குழந்தைகள் ஒருவர்பின் ஒருவராக இரண்டு வரிசையில் நிற்க வேண்டும்.
- படத்தில் காட்டியுள்ளவாறு, இரண்டு குழுவிற்கும் எதிரே ஒரே மாதிரியான கோடுகளைத் தரையில் வரைய வேண்டும்.
- இரண்டு குழுவிலும் முதலில் நிற்பவர் கோடுகளின்மீது ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்.
- முதலில் நிற்பவர் நடந்து முடித்தபிறகு அடுத்தவர் அதே கோட்டின்மீது நடக்க வேண்டும்.
- இரண்டு குழுவிலும் உள்ள அனைவரும் ஒவ்வொருவராகக் கோட்டின்மீது நடக்க வேண்டும்.



- எந்தக் குழுவினர் முதலில் நடந்து முடிக்கின்றனரோ அக்குழுவினரே வெற்றிபெற்றக் குழுவினர் ஆவர்.

## பந்தைக் கடத்துவோம்

- குழந்தைகள் ஒருவர்பின் ஒருவராக இரண்டு வரிசையில் நிற்க வேண்டும்.
- இரண்டு குழுவிலும் முதலில் நிற்பவர் ஆளுக்கொரு பந்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- ஆசிரியர் ஊதல் ஊதியவுடன் இரண்டு குழுவிலும் முதலில் நிற்பவர் தலைக்கு மேல் பந்தை உயர்த்திப் பின்னால் உள்ளவருக்குக் கடத்த வேண்டும்.
- இரண்டாவதாக நிற்பவர், பந்தைப் பெற்றுத் தலைக்குமேல் உயர்த்தி அடுத்தவருக்குக் கடத்த வேண்டும். இவ்வாறு ஒவ்வொருவராகப் பந்தைக் கடத்துதல் வேண்டும்.




- வரிசையின் இறுதியில் நிற்பவர், பந்தைப் பெற்றவுடன் குழு அப்படியே பின்னால் திரும்பி குனிந்து பந்தைக் கால்களுக்கிடையே அடுத்தவருக்குக் கடத்த வேண்டும். இவ்வாறு கடத்தும் பந்து மீண்டும் முதல் குழந்தையை அடைய வேண்டும்.
- எந்தக் குழு முதலில் விளையாடி முடிக்கிறதோ அக்குழுவே வெற்றிபெற்ற குழு ஆகும்.

www.cbsetamil.com

## இவர்களைப்போல் ஒலி எழுப்பி மகிழ்வோம்






## பொருத்தமானதை இணைப்பேன்

குயில்

கருங்குயில்


பாடும் கருங்குயில்



ஓடம்

இரண்டு ஓடம்


ஆற்றில் இரண்டு ஓடம்



மயில்

வண்ண மயில்


ஆடும் வண்ண மயில்



மலர்

மஞ்சள் மலர்

நான்கு மஞ்சள் மலர்





www.CBSETAMIL.com

# குறியீடுகளைக்கொண்டு சொற்களை உருவாக்குவோம்

| கு | சு | டு | து | நு | பு | மு | கூ | சூ | பூ | மூ | தூ | நூ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

| | |
|---|---|
| க | |
| ச | |
| ட | |
| த | |
| ந | |
| ப | |
| ம | |
| ர | |
| ல | |
| வ | |
| கா | |
| சா | |
| தா | |
| நா | |
| பா | |
| மா | |
| வா | |
| றா | |

| | |
|---|---|
| | கி |
| | சி |
| | டி |
| | தி |
| | பி |
| | மி |
| | ரி |
| | லி |
| | வி |
| | ளி |
| | கீ |
| | சீ |
| | தீ |
| | மீ |
| | வீ |

## சொல் எழுதி குறியீடு வரைக

## உரிய படத்திற்கு ✓ குறியிடுக






| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | இ | உ | ஊ | எ | ஒ | க் | ங் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ர் | ல் | ன் |

# குறியீடுகளைக்கொண்டு சொற்களை உருவாக்குவோம்


| கை | சை | டை | தை | நை | பை | மை | யை | ரை | லை | வை | னை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| | |
|---|---|
| கெ | கொ |
| செ | சொ |
| டெ | தொ |
| ணெ | நொ |
| தெ | பொ |
| நெ | மொ |
| பெ | ளொ |
| வெ | கோ |
| கே | சோ |
| சே | தோ |
| தே | நோ |
| நே | போ |
| பே | மோ |
| மே | ரோ |
| வே | வோ |
| ஜ் | ஸ் |
| ஜா | ஸா |
| ஜி | ஜூ |











## சொல் எழுதி குறியீடு வரைக

## உரிய படத்திற்கு ✓ குறியிடுக









| அ | ஆ | இ | உ | எ | ஒ | க் | ங் | ஞ் | ட் | ண் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | ன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

## படிப்போம்; உரிய சொல்லை எழுதுவோம்

தீ மணி விசிறி வானவில் திமிங்கலம் பலா சக்கரம் கடல் காகம்
நீ அகல் மிளகாய் மஞ்சள் ஓணான் காளான் நாய் மான் மிதிவண்டி

1. அடுப்பில் எரிவது
2. சுவையான பழம்
3. வானில் பறப்பது
4. காரமாக இருப்பது
5. இரு சக்கர வாகனம்
6. கடலில் வாழ்வது

## படிப்போம்; உரிய சொல்லை வட்டமிட்டு எழுதுவோம்

முட்டை
சிறுத்தை
ஆமை
செங்கல்
கைத்தடி
தேங்காய்
வேலி
தொலைபேசி
வானொலி
பேருந்து
சோளம்
மேகம்
சேவல்
கொடி
வௌவால்

| | |
|---|---|
| நான் நீந்துவேன் | ஆமை |
| வீடு கட்ட உதவுவேன் | |
| கூவி ஒலி எழுப்புவேன் | |
| பயணம் செய்ய உதவுவேன் | |
| தலைகீழாகத் தொங்குவேன் | |
| பாடல் கேட்க உதவுவேன் | |
| பயிருக்குப் பாதுகாப்பு தருவேன் | |

## படித்து மகிழ்வோம்



மரம்
பழ மரம்



உரல்
கல் உரல்



மண்
ஈர மண்



ஓடம்
மர ஓடம்



ஆப்பம்
வட்ட ஆப்பம்



பம்பரம்
மர பம்பரம்



கடல்
ஆழ் கடல்




சரம்
மல்லிச் சரம்



சட்டை
நீலச் சட்டை

## இணைத்து எழுதுவேன்

நீர்  — நீர்யானை

 ஆட்டம் — ____________

 ஊதல் — ____________

மண்  — ____________

கடல்  — ____________

 மேகம் — ____________

## சொல்லக் கேட்டு எழுதுவோம்

____________ ____________ ____________


____________ ____________ ____________

www.cbsetamil.com

# 2 செய்து மகிழலாம்




## வண்ணமிட்டு மகிழ்வேன்







## இலையில் உருவம் செய்து மகிழ்வோம்






www.CBSETAMIL.com

## மான்குட்டியின் ஆசை




## மான்குட்டி யாரிடம் என்ன வாங்கியது? இணைப்போம்



# மாணவர்கள் நினைத்தால்...




வெட்டுவதற்கு, உயரமான இடத்தில் ஒட்டுவதற்கு நான் உதவுகிறேன்
நாங்கள் தோரணம் செய்யப் போகிறோம்
ஔ
ஒ
இ
உ
ஒள
அ
ஈ
நமது வகுப்பறை அழகு வகுப்பறை!
குப்பையை இதில் போடவும்
புத்தகத்தைப் பாதுகாப்போம்


## தொடர்களைப் படத்துடன் பொருத்துக



பறிக்க வேண்டாம்!
பார்த்து மகிழுங்கள்!



அமைதி காப்போம்!
அறிவை வளர்ப்போம்!



மட்க மாட்டேன்! மறைய மாட்டேன்!
என்னைத் தனித்துப் பிரி!



தண்ணீர் நமது உயிர் நீர்!
வீணாக்காமல் சேமிப்போம்!



மண்ணுக்குள் ஒளிவோம்!
மட்கி மறைவோம்!

www.cbsetamil.com

# தமிழ் அமுது




தோண்டுகின்ற போதெல்லாம்
சுரக்கின்ற செந்தமிழே!
வேண்டுகின்ற போதெல்லாம்
விளைகின்ற நித்திலமே!
உன்னைத் தவிர
உலகில் எனைக் காக்க
பொன்னோ! பொருளோ!
போற்றிவைக்க வில்லையம்மா!

**– கவிஞர் கண்ணதாசன்**

பாடல் பொருள்

தோண்டுகின்ற பொழுதெல்லாம் ஊற்றைப்போல் சுரக்கின்ற செந்தமிழே! தேவைப்படும் பொழுதெல்லாம் விளைகின்ற முத்தே! உன்னை அன்றி இவ்வுலகில் என்னைக் காக்க வேறு பொன்னையோ பொருளையோ சேர்த்து வைக்கவில்லை, என்னைக் காத்திடுவாய் அம்மா.


www.CBSETAMIL.com

# 3 கண்ணன் செய்த உதவி





கதிரவனின் ஒளி எங்கும் படர்ந்திருந்தது. பறவைகள் ஒலியெழுப்பிப் பறந்தன. காலை வேளையில் கண்ணன் பள்ளிக்குப் புறப்பட்டான். அவன் செல்லும் வழியில் ஒரு பெரியவரைப் பார்த்தான். அந்தப் பெரியவர், "சாலையைக் கடக்க எனக்கு உதவுவாயா?" என்று அவனிடம் கேட்டார்.



"வாருங்கள் போகலாம்" என்று கூறிய கண்ணன், அவரது கையைப் பிடித்துக்கொண்டு பாதுகாப்பாக எதிர்ப்புறத்தில் விடுவதற்குச் சென்றான். அப்போது எதிரே ஒரு பேருந்து வேகமாக வந்தது. ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த அந்தப் பேருந்து, அருகில் இருந்த மரத்தில் மோதியது.

அறிந்த தகவல்களையும் செய்திகளையும் சரியான ஒலிப்புடன் தங்கு தடையின்றிக் கலவைத்தொடரில் பேசுதல்...

என்ன செய்வது என்று தெரியாமல் "ஐயோ காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" என்று உரக்கக் கத்தினான் கண்ணன். உடனே அந்தப் பெரியவர் தன் பையிலிருந்து அலைபேசியை எடுத்தார். பின் 108 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு பேசினார். அடுத்த சிறிதுநேரத்தில் அவசர ஊர்தி வந்தது. காவலர்களும் வந்தனர். அடிபட்டவர்களை மருத்துவமனையில் சேர்த்தனர்.




இதனைப் பார்த்த கண்ணன் பேருந்தில் இருந்தவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தான். அதன்பிறகு பள்ளிக்குச் சென்றான். ஆசிரியர் கண்ணனைப் பார்த்து "ஏன் தாமதமாக வருகிறாய்?" எனக் கேட்டார்.



கண்ணன் நடந்தவற்றைத் தெளிவாகக் கூறினான். ஆசிரியர் அவனைப் பாராட்டினார். அதனால் கண்ணன் மகிழ்ச்சியடைந்தான்.

"மாணவர்களே! நீங்களும் உங்களால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்ய வேண்டும். அதுவே மகிழ்ச்சியைத் தரும்" என்றார் ஆசிரியர். மாணவர்கள் அனைவரும் கைகளைத் தட்டி கண்ணனுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

**சிந்தித்துப் பேசலாமா?**

100, 108, 14417, 1098 போன்ற அவசரகால எண்களின் பயன்கள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

**என் மேடை! என் பேச்சு!**

- நான் பிறருக்குச் செய்த/செய்ய நினைக்கும் உதவிகள்
- பிறர் எனக்குச் செய்த உதவிகள்

# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. கதிரவன் இச்சொல் உணர்த்தும் பொருள் ................
   (அ) சந்திரன் (ஆ) சூரியன்
   (இ) விண்மீன் (ஈ) நெற்கதிர்
2. மகிழ்ச்சியடைந்தான் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................................
   (அ) மகிழ்ச்சி + அடைந்தான் (ஆ) மகிழ்ச்சி + யடைந்தான்
   (இ) மகிழ்ச்சியை + அடைந்தான் (ஈ) மகிழ்ச்சியை + யடைந்தான்
3. ஒலியெழுப்பி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................
   (அ) ஒலி + யெழுப்பி (ஆ) ஒலி + எழுப்பி
   (இ) ஒலியை + யெழுப்பி (ஈ) ஒலியை + எழுப்பி

## பொருத்தமான குறியிடுவேன் சரி (✓), தவறு (×)

1. கண்ணன் பெரியவருக்குச் சாலையைக் கடக்க உதவினான். ☐
2. கண்ணன் பள்ளிக்கு நேரத்தோடு வந்து விட்டான். ☐
3. பெரியவர் அலைபேசியில் 107ஐ அழைத்தார். ☐
4. மாணவர்கள் கண்ணனைப் பாராட்டினர். ☐

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. கண்ணன் எங்குப் புறப்பட்டான்?
2. பள்ளி செல்லும் வழியில் கண்ணன் யாரைப் பார்த்தான்?
3. பேருந்து எதில் மோதியது?
4. பெரியவர் எந்த எண்ணிற்கு அலைபேசியில் பேசினார்?
5. ஆசிரியர் கண்ணனை எதற்காகப் பாராட்டினார்?

## யாருக்கு எது தேவை? படித்துப் பார்த்து இணைப்போம்




மேகங்கள் திரண்டு உள்ளன





நிறைய பழங்கள் உள்ளன





நடந்து நடந்து தாகம் எடுக்கிறது





மரத்தில் எட்டாத
உயரத்தில் பழம் உள்ளது



## பொருத்தமான சொல்லால் நிரப்புவேன்


1.  இல்லாமல் __________ முடியாது.
2.  இல்லாமல் செடி __________.
3.  இல்லாமல் வண்டி __________.


ஓடாது


சமைக்க


வளராது


## எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குவேன்


1. 



2. 


3. 


4. 

5. 

6. 

7. 

8. 




## சொல்லிப் பழகுவோம்



கூவுர கோழி கொக்கர கோழி
கொக்கர கோழி கொழுகொழு கோழி
கொழுகொழு கோழி கொத்தற கோழி

கொக்கு நெட்ட கொக்கு
நெட்ட கொக்கு இட்ட முட்டை கட்ட முட்டை






தோணி மேல கோணி
கோணி மேல ஏணி
ஏணி மேல அணில்



கரடி கருங்கரடி
கரடி பிடரி
கரும் பிடரி

# 4 நமது நண்பர்


இருவரும் வெளியே விளையாடப் போகவில்லையா?
போகவில்லை அப்பா
யாரும் விளையாட வருவதில்லை
என் நண்பர் ஒருவரை உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன். அவருடன் நீங்கள் விளையாடலாம்
உங்கள் நண்பரா?
அவ்வளவு பெரியவர் எங்களுடன் எப்படியப்பா விளையாடுவார்?
முதலில் என் நண்பரைப் பற்றிச் சொல்கிறேன். பிறகு நீங்கள் விளையாடலாமா? வேண்டாமா? என்று முடிவு செய்யுங்கள். வாருங்கள் தோட்டத்திற்குச் சென்று பேசலாம்
ம்.. அப்படிப்பட்டவர் யாரென்றுதான் பார்ப்போமே
சரி சொல்லுங்கள் அப்பா
என் நண்பர் மிகவும் அன்பானவர். அவரும் நானும் நிறைய கதைகள் பேசியிருக்கிறோம்
இங்கே உட்காரலாம். நண்பருடன் நிறைய விளையாடி இருக்கிறேன்
இன்று ஊஞ்சல் ஆடலாமா?
ஆடலாமே!






சிந்தித்துப் பேசலாமா?

- நாம் மரங்களின் நண்பராக இருக்க முடியுமா?
- மரம் உங்களுக்கு நண்பராக இருந்தால் என்னவெல்லாம் செய்வீர்கள்? கலந்துரையாடுங்கள்.

நான் நண்பர்களுடன் விளையாடிய விளையாட்டுகள்

என் மேடை! என் பேச்சு!

# பயிற்சி

## நிரப்புவேன்

1. ஊஞ்சல் ஆட இடம் தந்த நண்பர் ______________ .

2. இலையில் ______________ செய்து ஊதலாம்.

3. சிட்டைப் பார்த்து ______________ விருப்பம் வந்தது.

4. மரத்தடியில் ______________, ______________ விளையாட ஆசை.

5. அப்பா சிறுவனாக இருந்தபோது சிலந்தியின் ______________ பார்த்துப் படம் வரைந்தார்.


## நான் விளையாடிய விளையாட்டுகளை ✓ செய்வேன்



நுங்கு வண்டி ☐



கண்ணாமூச்சி ☐



ஊஞ்சல் ☐



பம்பரம் ☐



பல்லாங்குழி ☐



ஐந்தாங்கல் ☐





www.CBSETAMIL.com

## என்னைப் பற்றி எழுதுவேன்

| | |
|---|---|
| பெயர் | |
| வகுப்பு | |
| தாய் பெயர் | |
| தந்தை பெயர் | |
| பள்ளி பெயர் | |
| நண்பர் பெயர் | |
| ஊர் பெயர் | |
| மாவட்டம் பெயர் | |
| மாநிலம் பெயர் | |
| நாடு பெயர் | |
| பெற்றோர் அலைபேசி எண் | |

## இரண்டெழுத்து, மூன்றெழுத்துச் சொற்களை உருவாக்குவேன்



## எழுத்துகளின் வகை அறிந்து கொள்வோம்

### உயிரெழுத்துகள்

தமிழில் உள்ள உயிரெழுத்துகள் மொத்தம் – 12

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

#### உயிர்க்குறில் எழுத்துகள்

அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துகளும் ஓசையில் குறைந்து ஒலிப்பதால் குறில் எழுத்துகள் எனப்படும்.

#### உயிர்நெடில் எழுத்துகள்

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு எழுத்துகளும் ஓசையில் நீண்டு ஒலிப்பதால் நெடில் எழுத்துகள் எனப்படும்.

### மெய்யெழுத்துகள்

தமிழில் உள்ள மெய்யெழுத்துகள் மொத்தம் – 18

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

#### வல்லின மெய்கள்

க், ச், ட், த், ப், ற் ஆகிய ஆறு எழுத்துகளும் வலிய ஓசை உடையதால் வல்லினம் எனப்படும்.

#### மெல்லின மெய்கள்

ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஆறு எழுத்துகளும் மென்மையான ஓசை உடையதால் மெல்லினம் எனப்படும்.

#### இடையின மெய்கள்

ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய ஆறு எழுத்துகளும் வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இடைப்பட்ட ஓசை உடையதால் இடையினம் எனப்படும்.

**உங்கள் பெயரிலும் உங்கள் நண்பர்களின் பெயர்களிலும் இடம்பெற்றுள்ள மெய்யெழுத்துகளைக் கண்டுபிடிக்க.**

www.cbsetamil.com

# 5 மாட்டு வண்டியிலே...

இளமதியும் மணவாளனும் தாத்தாவுடன் வார விடுமுறைக்கு அத்தை வீட்டிற்குச் செல்லத் திட்டமிட்டனர். சலங்கை கட்டிய மாடுகளை வண்டியில் பூட்டினார் தாத்தா. வண்டியின் மீது வைக்கோலைப் பரப்பி மேலே வெள்ளை வேட்டியினை விரித்தார். துள்ளிக் குதித்து இருவரும் ஏறி அமர்ந்தனர்.

'ஜல் ஜல்' எனச் சத்தமிட்டவாறு வண்டி கிராமத்துச் சாலையில் ஓடத் தொடங்கியது. சாலையின் இருமருங்கிலும் பசுமை போர்த்திய வயல்வெளிகள்.

ஏதாவது கதை சொல்லுங்க தாத்தா என்றனர் பிள்ளைகள். சொல்லிட்டாப் போச்சு, கதையென்ன புதிர் போடுகிறேன், பதில் சொல்லுங்க பார்க்கலாம் என்றார் தாத்தா. புதிரா? ம்ம்.. கேளுங்க தாத்தா சொல்கிறோம் என்றனர் பிள்ளைகள்.

தாத்தா: ஆறையும் ஐந்தையும் கூட்டினால் பணம் வராது.... ஆனா பழம் வரும் அது என்ன?

இளமதி: ஆங்... கண்டுபிடிச்சிட்டேன்... ஆரஞ்சுப்பழம் தானே....



புதிர்கள், துணுக்குகளுக்கு விடை கூறுதல், எழுதுதல்

www.cbsetamil.com



**தாத்தா:** சரியா சொல்லிட்டியே, செல்லக்குட்டி. சரி இன்னொன்று கேட்கிறேன். பிறக்கும்போது நிறமும் சுவையும் இல்லாதது, ஊருக்கு ஊர் சுவை மாறும் அது எது?

**மணவாளன்:** ம்ம்ம்... எல்லாரோட தாகத்தையும் தீர்க்கும் தண்ணீர் தானே...

**தாத்தா:** ஆமா! ஆமா! சரியா சொல்லிட்டீங்களே!

**இளமதி:** தாத்தா, அத்தை வீடு வந்துவிட்டது.

**தாத்தா:** சரி, வண்டியை ஓரமாக நிறுத்துகிறேன்.

(மூவரும் வண்டியைவிட்டு இறங்கி, ஆவலுடன் வீட்டை நோக்கிச் சென்றனர்.)

**மணவாளன்:** நான் ஒரு புதிர் போடுகிறேன், அத்தை வீட்டிற்குள் போவதற்குள் விடை சொல்லுங்க தாத்தா

**தாத்தா:** எனக்கே புதிரா? சரி கேளுங்க

**மணவாளன்:** மூன்றாம் எழுத்து உடலின் உறுப்பு. முதலும் மூன்றும் நட்புக்கு எதிரி. ஒன்றும் இரண்டும் நிறைய தரும். மூன்றும் சேர்ந்தால் உட்கார உதவும் அது என்ன?

தாத்தா பதிலைக் கண்டுபிடித்துவிட்டார். நீங்கள் உங்கள் நண்பர்களுடன் சேர்ந்து கண்டுபிடியுங்கள்; விடையை எழுதுங்கள். ______

**சிந்தித்துப் பேசலாமா?**

உங்களுக்குத் தெரிந்த புதிர், விடுகதைகளைக் கேட்டும் விடை கூறியும் மகிழுங்கள்.

**என் மேடை! என் பேச்சு!**

- நான் பயணம் செய்த வாகனம்
- என் பயணம்



www.CBSETAMIL.com

# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. **தண்ணீர்** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................

   (அ) தண்+ணீர் (ஆ) தண் + நீர்

   (இ) தண்மை + நீர் (ஈ) தன் + நீர்

2. **மேலே** இச்சொல்லின் எதிர்ச்சொல் ..........................

   (அ) உயரே (ஆ) நடுவே

   (இ) கீழே (ஈ) உச்சியிலே

3. **வயல் + வெளிகள்** இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........................

   (அ) வயல்வெளிகள் (ஆ) வயவெளிகள்

   (இ) வயற்வெளிகள் (ஈ) வயல்வளிகள்

4. **கதை + என்ன** இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........................

   (அ) கதை என்ன (ஆ) கதையன்ன

   (இ) கதையென்ன (ஈ) கதயென்ன


## சொல் கோபுரம் அமைப்பேன்

அழைக்க உதவும் சொல் →

தாகத்திற்குக் குடிப்பது →

உறவுப் பெயர் →


பழங்களுள் ஒன்று →



## கண்டுபிடித்துப் பொருத்துவோம்















## சொற்களுக்குள் ஒளிந்துள்ள உணவுப்பொருளைக் கண்டுபிடித்து எழுதுவேன்

| | | |
|---|---|---|
| பொடி / செங்கல் | → | பொங்கல் |
| தோகை / ஆசை | → | |
| வங்கி / கடை | → | |
| முகில் / சறுக்கு | → | |
| பூக்கள் / சாந்தி | → | |
| பொம்மை / நரி | → | |



### செயல்திட்டம்

புதிர், விடுகதைகளை உங்கள் பெற்றோரிடம் கேட்டு எழுதிவந்து வகுப்பறையில் வழங்குக.

## கண்ணாடியில் பார்ப்போம்; புதிருக்குப் பொருத்தமான விடையை எழுதுவோம்



1. எட்டுக் கைகள் விரிந்தால் ஒற்றைக்கால் தெரியும்; அது என்ன?

   ______________________________

2. அடிமலர்ந்து, நுனி மலராத பூ; என்ன பூ?

   ______________________________

3. கையிலே அடங்கும் பிள்ளை; கதை நூறு சொல்லும் பிள்ளை; அது என்ன?

   ______________________________

4. அன்றாடம் மலரும்; அனைவரையும் கவரும்; அது என்ன?

   ______________________________

5. என்னோடு இருக்கும் சிறுமணி, எனக்குத் தெரியாது; ஆனால், உனக்குத் தெரியும்; அது என்ன?

   ______________________________

6. இடி இடிக்கும்; மின்னல் மின்னும்; மழை பெய்யாது; அது என்ன?

   ______________________________


7. அடி காட்டுக்கு; நடு மாட்டுக்கு; நுனி வீட்டுக்கு; அது என்ன?

   ______________________________

## கண்டுபிடித்து வட்டமிடுவோம்



## உரிய வடிவத்தோடு இணைப்பேன்; பிடித்த வண்ணமிடுவேன்



# 6 டும்... டும்... சின்னு

சின்னு எப்போதும் பாடிக்கொண்டே இருப்பான். சின்னுவின் பாடலைக்கேட்ட தோட்டக்காரர் ஒரு கூடையில் தக்காளியைச் சின்னுவிற்குக் கொடுத்தார். சின்னு மீண்டும் பாடினான்.



பாட்டுப்பாடித் தக்காளி வந்தது டும் டும் டும் டும்
பாட்டுப்பாடித் தக்காளி வந்தது டும் டும் டும் டும்
டும் டும் டும் டும் டும் டும் டும் டும்

பாடிக்கொண்டே நடந்தான். எலுமிச்சை விற்கும் பாட்டி, 'தம்பி, நான் எலுமிச்சைத் தருகிறேன், நீ எனக்குத் தக்காளி தருவாயா?' என்று சின்னுவைக் கேட்டார். ஒப்புக்கொண்ட சின்னு மீண்டும் பாடினான்.



தக்காளி போயி எலுமிச்சை வந்தது டும் டும் டும் டும்
தக்காளி போயி எலுமிச்சை வந்தது டும் டும் டும் டும்
டும் டும் டும் டும் டும் டும் டும் டும்

போகும் வழியில் சிறுவன் ஒருவன் 'தாகமாக இருக்கிறது' என்றான். 'சாறு பிழிந்து குடியுங்கள்' என்று கூறி எலுமிச்சையைத் தந்தான் சின்னு. பதிலுக்குப் பட்டத்தைத் தந்தான் சிறுவன். சின்னு மீண்டும் பாடினான்.



எலுமிச்சை போயி பட்டம் வந்தது டும் டும் டும் டும்
எலுமிச்சை போயி பட்டம் வந்தது டும் டும் டும் டும்
டும் டும் டும் டும் டும் டும் டும் டும்

வாத்து மேய்க்கும் ஒருவர், 'தம்பி அந்தப் பட்டத்தை என் குழந்தைக்காகத் தருவாயா? நான் உனக்கு வாத்து தருகிறேன்' என்று சின்னுவிடம் கேட்டார். ஒப்புக்கொண்ட சின்னு மீண்டும் பாடினான்.



பட்டம் போயி வாத்து வந்தது டும் டும் டும் டும்
பட்டம் போயி வாத்து வந்தது டும் டும் டும் டும்
டும் டும் டும் டும் டும் டும் டும் டும்



தொப்பி விற்கும் ஒருவர், 'தம்பி வாத்தை வளர்ப்பதற்குத் தருவாயா? நான் உனக்குத் தொப்பி தருகிறேன்?' என்றார். ஒப்புக்கொண்ட சின்னு மீண்டும் பாடினான்.

வாத்து போயி தொப்பி வந்தது டும் டும் டும் டும்
வாத்து போயி தொப்பி வந்தது டும் டும் டும் டும்
டும் டும் டும் டும் டும் டும் டும் டும்



வெற்றிலை பறித்துக் கொண்டிருந்த ஒருவர், 'தம்பி வெயிலாக இருக்கிறது. அந்தத் தொப்பியைத் தருவாயா? நான் வெற்றிலையைத் தருகிறேன்' என்று கேட்டார். ஒப்புக்கொண்ட சின்னு மீண்டும் பாடினான்.

தொப்பி போயி வெற்றிலை வந்தது டும் டும் டும் டும்
தொப்பி போயி வெற்றிலை வந்தது டும் டும் டும்
டும் டும் டும் டும் டும் டும் டும் டும்

அப்பொழுது சின்னுவைப் பார்த்த ஒருவர், 'தம்பி விருந்து ஒன்றிற்காக வெற்றிலைக்கட்டுகளைத் தருவாயா? உன்னை விருந்துக்கு அழைத்துச் செல்கிறேன்' என்று கேட்டார். சின்னு ஒப்புக்கொண்டான். விருந்தில் சின்னுவுக்குப் பிடித்த தோசையும் இருந்தது. தோசையைச் சாப்பிட்ட சின்னு மீண்டும் பாடினான்.

வெற்றிலை போயி தோசை வந்தது டும் டும் டும் டும்
வெற்றிலை போயி தோசை வந்தது டும் டும் டும் டும்
டும் டும் டும் டும் டும் டும் டும் டும்



தோசையைச் சாப்பிட்டதும் சின்னுவிற்கு ஏப்பம் வந்தது. சின்னு மீண்டும் பாடத் தொடங்கினான். சின்னு இப்பொழுது என்ன பாடி இருப்பான்? நீங்களும் பாடுங்களேன்!



சிந்தித்துப் பேசலாமா?

எதையும் எதிர்பார்க்காமல் செய்யும் உதவி குறித்துக் கலந்துரையாடுங்கள்.

- டும்... டும்... சின்னு கதை
- எனக்குத் தெரிந்த கதை

என் மேடை! என் பேச்சு!

# பயிற்சி

## பாடலை நிரப்பிப் பாடுவேன்



பாட்டுப் பாடி ________________ வந்தது டும் டும் டும் டும்



தக்காளி போயி ________________ வந்தது டும் டும் டும் டும்



எலுமிச்சை போயி ________________ வந்தது டும் டும் டும் டும்



பட்டம் போயி ________________ வந்தது டும் டும் டும் டும்



வாத்து போயி ________________ வந்தது டும் டும் டும் டும்



தொப்பி போயி ________________ வந்தது டும் டும் டும் டும்



வெற்றிலை போயி ________________ வந்தது டும் டும் டும் டும்



தோசை போயி ________________ வந்தது டும் டும் டும் டும்

## முடியும் சொல்லை முதலாகக் கொண்டு அடுத்த தொடரை நிரப்புவேன்

(உண்டு சென்று பசியுடன்)

ஆமினா பாடினாள்.

பாடி ஆடினாள்.

ஆடியதால் பசித்தது.

__________ நடந்தாள்.

நடந்து சென்றாள்.

__________ அமர்ந்தாள்.

அமர்ந்து உண்டாள்.

__________ மகிழ்ந்தாள்.



## சொல்லின் ஓர் எழுத்தைக் கொண்டு, புதிய சொல்லை உருவாக்குவோம்

1. பா த ம் → தங் க ம் → க த வு → தலை வ ர் → வ __________
2. ஒட்ட க ம் →
3. குருவி
4. சிங்கம்

## சொல்லில் உள்ள எழுத்தை முதல் எழுத்தாக்கி வேறு சொற்களை எழுதுவேன்

தக்காளி → தண்ணீர்
தக்காளி → காலை

பப்பாளி → ப __________
பப்பாளி → பா __________

கதவு → __________
கதவு → __________


www.CBSETAMIL.com

## படங்களை உரிய சொல்லோடு இணைப்பேன்








6

நூல்

ஆறு

கொடி

மாலை









## பொருத்தமான சொல்லைக் கண்டறிந்து எழுதுவேன்




நீ நடனம்

தழையைத் தின்னும்

சட்டையை நீ

தமிழ் மாதங்களில் ஒன்று

புத்தகத்தை நீயும்

மாடிக்கு ஏறிச்செல்ல உதவுவது

அரிசியை அளக்கப் பயன்படும்

விரைவாக நீ

நத்தையின் முதுகில் இருப்பது

வீட்டின் கூரையாக வேய்வது

# 7 தனித்திறமை


புலி அரசர் பதவி ஏற்றார். பிற விலங்குகளை அழைத்துப் பொறுப்புகளைப் பகிர்ந்து அளித்தார்
சிங்கக்குட்டிதான் நமது படைத்தளபதி
சிங்கக்குட்டியே... பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்
நன்றி மன்னா! உடனே பதவியை ஏற்றுக் கொள்கிறேன்
ஆந்தையாரே... நீங்கள் இரவுக்காவல் அமைச்சர்
சரிங்க அரசே! நான் என் பதவியை ஏற்றுக் கொள்கிறேன்


கழுதையாரே...
உமக்கு உரிய
பதவி ...
அரசே! அரசே!
இந்தக் கழுதை ஒரு
முட்டாள். இதனால்
எந்த ஒரு பயனும்
இல்லை
அப்படியா!
இதே போல் முயல்,
ஆமை இரண்டும்
எதற்கும் பயன்படாது






சிந்தித்துப் பேசலாமா?

- ஒரு சில திறமைகளை உயர்வாகவும் பிறவற்றைத் தாழ்வாகவும் நினைப்பது சரியா?
- நன்கு விளையாடுபவர்களைவிட நன்கு படிப்பவர்களை உயர்வாக நினைக்கலாமா? கலந்துரையாடுங்கள்.

என் மேடை! என் பேச்சு!

- எனது தனித்திறமைகள்
- என் நண்பர்களின் திறமைகள்

# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல் ........................................

(அ) நண்பர்கள் (ஆ) எதிரிகள்

(இ) அயலவர்கள் (ஈ) சகோதரர்கள்

2. பணி இச்சொல் உணர்த்தும் பொருள் ........................................

(அ) வாழை (ஆ) வேளை

(இ) வேலை (ஈ) வாளை

3. படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

(அ) படைத் + தளபதி (ஆ) படை + தளபதி

(இ) படையின் + தளபதி (ஈ) படைத்த + தளபதி

4. எதை + பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................................

(அ) எதைபார்த்தாலும் (ஆ) எதபார்த்தாலும்

(இ) எதைப்பார்த்தாலும் (ஈ) எதைபார்தாலும்

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில் நடைபெற்றது?

2. புலி ராஜா, படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?

3. ஆந்தைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?

4. கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக் கூறியது?

5. இந்தக் கதையின்மூலம் நீங்கள் அறிந்துகொள்வது யாது?

## எந்த உயிரினத்திற்கு என்ன பண்பு? இணைப்போம்









- பகிர்ந்து உண்ணுதல்
- வரிசையாகச் செல்லுதல்
- கூட்டமாக வாழ்தல்
- நன்றியுணர்வு

## நிகழ்வை உரிய சொற்களால் நிரப்புவோம்




மேகம் கருக்க

மின்னல் மின்ன

இடி ____________


மழை ____________


வெள்ளம் ____________


குளம் ____________


மீன்கள் மகிழ்ந்தன.

## சூழலுக்கு ஏற்ற குறியீட்டை வரைவோம்









## உரிய குறியீட்டை வரைந்து எழுதுவேன்


| | | | | |
|---|---|---|---|---|
| சிரிப்பு | மகிழ்ச்சி | வருத்தம் | வியப்பு | அச்சம் |

| | |
|---|---|
| பாட்டி புத்தாடை வாங்கித் தந்தால் | மகிழ்ச்சி |
| மிகப்பெரிய யானையைப் பார்த்தால் | |
| கோமாளி செய்யும் செயல்களைக் கண்டால் | |
| நண்பர் கீழே விழுவதைக் கண்டால் | |
| திடீரெனப் பாம்பைக் கண்டால் | |


www.cbsetamil.com

## படிப்போம்; தொடர்ந்து உரையாடுவோம்

### கடையில்...




### வீட்டின் அருகில்....




### பூங்காவில்...





www.CBSETAMIL.com

# 8 இறகு யாருடையது?

கயல் ஓர் இறகினைக் கையில் வைத்திருந்தாள். இறகினைக் கன்னங்களில் வைத்து எவ்வளவு மென்மையான இறகு என்று கயல் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே அவளின் செல்ல நாய்க்குட்டி அருகில் ஓடி வந்தது. மெதுவாகக் குரைத்துக்கொண்டே உரசியது.



'இந்த இறகு உன்னைப் போலவே மென்மையாகவும் அழகாகவும் இருக்கிறது அல்லவா?' என்று சிரித்துக் கொண்டே நாய்க்குட்டியிடம் கேட்டாள்.

'இந்த இறகைப் பார்த்ததும் என்னை மறந்துவிட்டாளே' இது யாருடையது எனத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்த நாய்க்குட்டி சட்டென்று இறகை அவளிடமிருந்து பிடுங்கிக்கொண்டு ஓடியது. இதனைப் பார்த்ததும் கயலுக்கு ஒரே சிரிப்பு.

நாய்க்குட்டி ஓடிய வழியில் உழவர் ஒருவர் ஏர் உழுது கொண்டிருந்தார்.

'உழவர் ஐயா! உழவர் ஐயா! இந்த இறகு யாருடையது?' என்று கேட்டது.

'கழுத்து நீண்ட பறவைதான்; கண்டுபிடி பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். அப்பொழுது கூ.... கூ.... என்று இனிமையான குரல் கேட்டது. ஆம்! நம் குயில் அக்காதான் அது. நாய்க்குட்டி குயிலக்காவிடம் ஓடியது.

'கூவும் குயிலக்கா.. கூவும் குயிலக்கா... இந்த இறகு யாருடையது?' என்று கேட்டது.

குயிலக்கா நாய்க்குட்டியிடம் சிறிது நேரம் விளையாட விரும்பியது. 'நான் கூவும் பறவை; அது அகவும் பறவை; கண்டுபிடி பார்க்கலாம்' என்றது. அருகில் இருந்த செவ்வந்திப்பூ சட்டென்று சிரித்துவிட்டது. உடனே நாய்க்குட்டி,



செவ்வந்திப் பூவே.. செவ்வந்திப் பூவே.. இந்த இறகு யாருடையது? என்று கேட்டது.

'கொண்டையுள்ள பறவை அது; கண்டுபிடி பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தது.

அருகே ஒரு பாட்டி கூழ் விற்றுக்கொண்டிருந்தார்.



'கூழ் விற்கும் பாட்டியே, கூழ் விற்கும் பாட்டியே இந்த இறகு யாருடையது?' என்று கேட்டது.

'என் அன்பான நாய்க்குட்டியே, இது கூடவா உனக்குத் தெரியாது? நம் தேசியப் பறவை அதுதான்; கண்டுபிடி பார்க்கலாம்' என்று கேட்டுவிட்டுப் பொக்கை வாய் தெரியச் சிரித்தார்.

'என் நண்பரிடம் கேட்டு நானே தெரிந்து கொள்கிறேன் பாட்டி' என்று கூறிவிட்டு அருகில் உள்ள காட்டிற்குள் ஓடியது. அங்கே குள்ளநரி, வெள்ளரி சாப்பிட்டுக் கொண்டிருந்தது. நாய்க்குட்டி குள்ளநரியிடம் கேட்டது.

'நாட்டியமாடும் பறவை அது; கண்டுபிடி பார்க்கலாம்' என்று கூறியது குள்ளநரி.

'நீண்ட கழுத்தைக் கொண்டது
அகவல் ஒலி எழுப்புவது
அழகிய கொண்டை உடையது
நம் தேசியப் பறவை அது
நடனம் ஆடி மகிழ்வது
நானே கண்டுபிடித்தேனே
நீண்ட தோகை கொண்ட
மயில் அண்ணாதானே அது'

என்று நாய்க்குட்டி சொல்லிவிட்டு, தூரத்தில் தெரிந்த மயில் அண்ணாவைப் பார்த்தது. மயிலையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு சற்றுநேரம் நின்றது.

சட்டென்று சுதாரித்துக்கொண்டு மயிலைப் பார்த்துக் குரைத்துவிட்டு மீண்டும் கயலைப் பார்க்க வீட்டிற்கு ஓடியது. நாய்க்குட்டியைப் பார்த்ததும் கயல் வாரி அணைத்துக்கொண்டாள்.



சிந்தித்துப் பேசலாமா?

புதியதாக அறிந்துகொள்ள வேண்டும் என விரும்பும் தகவல்களை எவ்வாறெல்லாம் அறிந்துகொள்ளலாம்?

நான் புதியதாகத் தெரிந்துகொண்டவை



# பயிற்சி

## கூறியது யார்? படத்துடன் இணைப்பேன்

கழுத்து நீண்ட பறவைதான்;
கண்டுபிடி



நம் தேசிய பறவை அதுதான்;
கண்டுபிடி



நான் கூவும் பறவை;
அது அகவும் பறவை; கண்டுபிடி



நாட்டியமாடும் பறவை அது;
கண்டுபிடி



கொண்டையுள்ள பறவை அது;
கண்டுபிடி



## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. இறகினைக் கையில் வைத்திருந்தவர் யார்?

2. இறகுக்கு உரிய பறவையைத் தேடிச்சென்றது எது?

3. நாய்க்குட்டி தேடிக் கண்டடைந்த பறவை எது?

## பிடித்த இறகை வரைவேன்



## குழுவில் சேராததை வட்டமிடுவேன்

| | | | | |
|---|---|---|---|---|
| வெண்மை | கருமை | மென்மை | பசுமை | செம்மை |
| ஆறு | ஏரி | குளம் | மலை | குட்டை |
| தாயம் | பல்லாங்குழி | ஐந்தாங்கல் | சதுரங்கம் | மிதிவண்டி |
| மயில் | கிளி | புறா | புலி | கோழி |
| கத்தரி | வெண்டை | தக்காளி | தென்னை | மிளகாய் |

## முதலெழுத்தை மாற்றி விடையை எழுதுவேன்

**காகம்**

வானில் இருப்பது
மழை தருவது
அது எது ? மேகம்

**வாளி**

பச்சை எனது நிறம்
கீ .. கீ எனது ஒலி
நான் யார் ? ____

**அவல்**

கூரை மேல் இருப்பவன்
கூவிக் கூவி அழைப்பவன்
நான் யார் ? ____

**வீடு**

இலை தழை எனது உணவு
மே .. மே.. எனது ஒலி
நான் யார் ? ____

**பானை**

பதுங்கிப் பதுங்கி நடப்பவன்
பாலை விரும்பிக் குடிப்பவன்
நான் யார் ? ____

**அரும்பு**

நீளமாக இருக்கும்
கடித்தால் இனிக்கும்
அது எது? ____

## படம் பார்த்துப் பேசி மகிழ்வோம்; விரும்பியதைப் பொருத்தமாக எழுதுவோம்



1. ______________ அழகாக உள்ளது.
2. மஞ்சள் வண்ணத்தில் ______________ உள்ளன.
3. ______________ பறக்கிறது.
4. ______________

______________

## யார் செய்தார்கள்? என்ன செய்தார்கள்? படித்து எழுதுவேன்

1. சேவல் ஓடுகிறது
2. தம்பி ஆடுகிறான்
3. கொடி படர்கிறது
4. அத்தை சிரிக்கிறார்
5. கெண்டை மீன் நீந்துகிறது



பெயர்: சேவல்

செயல்: ஓடுகிறது



பெயர்: ____________

செயல்: ____________



பெயர்: ____________

செயல்: ____________



பெயர்: ____________

செயல்: ____________



பெயர்: ____________

செயல்: ____________

## பெயர் எது? செயல் எது? எழுதுவேன்

| | பெயர் | செயல் |
|---|---|---|
| 1. குழலி பூ கோத்தாள். | குழலி<br>பூ | கோத்தாள் |
| 2. அமுதன் பந்து விளையாடினான். | ____________<br>____________ | ____________ |
| 3. கோழி அரிசி தின்றது. | ____________<br>____________ | ____________ |

# 9 ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

காட்டில் மரங்களுக்கும் விலங்குகளுக்கும் ஒரு போட்டி நடந்தது.






**திறன்:** நல்ல பண்புகளை வளர்த்தல்

**கதையின் கருத்து :** ஒற்றுமையே வலிமை



**சிந்தித்துப் பேசலாமா?**

மரங்கள் விலங்குகளுக்கு மட்டுமல்ல, நமக்கும் பயன் தருகின்றன. எப்படி? கலந்துரையாடுங்கள்.

மரம் எனது நண்பன்

**என் மேடை! என் பேச்சு!**

# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. ஏற்றுக்கொள்கிறோம் கூறியது யார்? ..........................

(அ) மரங்கள் (ஆ) விலங்குகள்

(இ) பறவைகள் (ஈ) மனிதர்கள்

2. வேட்டை+ ஆட இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..........................

(அ) வேட்டையட (ஆ) வேட்டையாட

(இ) வேட்டைஆடு (ஈ) வெட்டையாட

3. உயர்வு இச்சொல்லின் எதிர்ச்சொல் ..........................

(அ) பணிவு (ஆ) கனிவு

(இ) தாழ்வு (ஈ) துணிவு

4. 'மரங்கள் இல்லாமல் குளிர்ச்சியே இல்லை' என்று கூறியது ..............................

(அ) சிங்கம் (ஆ) புலி

(இ) முயல் (ஈ) மான்

## வினாக்களுக்கு விடையளிப்பேன்


1. மரங்கள் எவற்றுடன் சண்டையிட்டன?

2. காட்டைவிட்டு எவை வெளியேறின?

3. விலங்குகளுக்கும் மரங்களுக்கும் இடையே ஏற்பட்ட போட்டி யாது?

4. கதையின்மூலம் நீ என்ன தெரிந்து கொண்டாய்?

## எந்த மரத்திலிருந்து என்ன பொருள்? பொருத்துவேன்



## வேறுபட்ட வண்ணத்தில் உள்ள எழுத்துகளைச் சேர்த்தால் கிடைக்கும் ஆடை வகைகளை எழுதுவோம்

| | | | |
|---|---|---|---|
| பள்ளம் | அரும்பு | பார்த்திபன் | பருத்தி |
| பருந்து | வட்டம் | வண்டு | ______ |
| கம்பு | பம்பரம் | தக்காளி | ______ |
| சக்கரம் | தட்டு | குடை | ______ |
| புற்று | குடம் | குடுவை | ______ |
| வேர் | மிட்டாய் | தொட்டில் | ______ |

## உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புவோம்



**வீணை / பூனை**



எட்டிப் பார்த்தது ______________

இசை தருவது ______________



**மலை / மழை**



______________ பெய்தது.

______________ உயரமானது.



**வாள் / வால்**



மரத்தை அறுப்பது ______________

மாட்டுக்கு இருப்பது ______________



**புலி / புளி**



மரத்தில் காய்ப்பது ______________

காட்டில் வாழ்வது ______________

## பொருத்தமான சொற்களால் நிரப்புவோம்

1. ஆற்றின் ஓரம் _________. ஆடையில் இருப்பது _________. (கறை, கரை)

2. மனிதர் செய்வது_________. மரத்தை அறுப்பது_________. (அறம், அரம்)

3. மீனைப் பிடிப்பது_________. கையில் அணிவது_________. (வளை,வலை)

4. பொழுதைக் குறிப்பது_______. பொறுப்பாய்ச் செய்வது_______. (வேலை, வேளை)

5. வீரத்தைக் குறிப்பது_________. விறகைத் தருவது_________. (மரம், மறம்)

6. விடிந்த பின் வருவது________. வீட்டில் வளர்ப்பது ________. (காளை, காலை)

# 10 சான்றோர் மொழி



## இனியவை நாற்பது

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது.

–பூதஞ்சேந்தனார்

## பாடல் பொருள்

**கற்றவர்களின்முன் தான் கற்ற கல்வியைக் கூறுதல் இனிமையானது. அறிவில் மேம்பட்டவர்களுடன் சேர்ந்திருப்பது மிகவும் இனிமையானது. எள் அளவு சிறியதாயினும் தான் பிறரிடம் கேட்டுப் பெறாமல், பிறருக்குக் கொடுத்தல் எல்லாவற்றையும்விட இனிமையானதாகும்.**

### பொருள் அறிவோம்

| | |
|---|---|
| மிக்கார் | : அறிவில் மேம்பட்டவர் |
| எள்துணை | : எள் அளவு |
| எத்துணையும் | : எல்லாவற்றிலும் |
| மாண்பு | : பெருமை |

### நூலைப்பற்றி...

இந்நூல் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனாரால் எழுதப்பட்டது. வாழ்க்கைக்கு நன்மை தரும் இனிய கருத்துகளைக் கூறுவது. நாற்பது பாடல்களைக் கொண்டது. எனவே இனியவைநாற்பது என்று அழைக்கப்படுகிறது.

**செய்யுளைத் தெளிவான உச்சரிப்புடன் படித்தல், அதன் சரியான பொருளைப் புரிந்துகொண்டு கருத்தை வெளிப்படுத்துதல்.**

www.cbsetamil.com



சிந்தித்துப் பேசலாமா?

கல்வியினால் ஏற்படும் சிறப்புகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

எனது சிறந்த பண்பு

என் மேடை! என் பேச்சு!



## பயிற்சி

### சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. உரைத்தல் என்ற சொல் குறிக்கும் பொருள். ......................................

| | |
|---|---|
| (அ) பாடுதல் | (ஆ) வரைதல் |
| (இ) கூறுதல் | (ஈ) எழுதுதல் |

2. ஈதல் என்ற சொல் குறிக்கும் பொருள் ......................................

| | |
|---|---|
| (அ) கொடுத்தல் | (ஆ) எடுத்தல் |
| (இ) தடுத்தல் | (ஈ) வாங்குதல் |

3. அறிவில் மேம்பட்டவர்களுடன் சேர்ந்திருப்பது இனிமையானது – வண்ணமிட்ட சொல்லின் பொருள் ......................................

| | |
|---|---|
| (அ) அறிவிலாதார் | (ஆ) மிக்கார் |
| (இ) கற்றோர் | (ஈ) அறிந்தோர் |

4. இரவாது என்ற சொல் குறிக்கும் பொருள் ......................................

| | |
|---|---|
| (அ) பிறரிடம் கேட்டுப் பெறாது | (ஆ) பிறரிடம் கேட்டுப் பெறுவது |
| (இ) பிறரிடம் கொடுப்பது | (ஈ) பிறருக்கு கொடுக்காது |

5. சேர்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் ......................................

| | |
|---|---|
| (அ) தேடுதல் | (ஆ) பிரிதல் |
| (இ) இணைதல் | (ஈ) களைதல் |


www.CBSETAMIL.com

## செய்து மகிழ்வோம்



www.cbsetamil.com

# வந்த பாதை

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துவோம்

1. உணவை எடுத்திடும்
உண்ணாமல் வைத்திடும்
உடல் மெலிந்தது – அது என்ன?

2. வெள்ளையாம் வெள்ளைக்குடம்
விழுந்தால் சல்லிக்குடம் – அது என்ன?

3. கொடிகொடியாம் பூங்கொடியாம்
கிளிதின்னும் பழம் இதுவாம் – அது என்ன?

4. தட்டு வெள்ளைத் தட்டு
தகதகக்கும் வெள்ளித்தட்டு
தலைக்குமேல் உலாவரும் – அது என்ன?


5. ஆயிரம் அறை கொண்ட
மிகப்பெரிய மிட்டாய் கடை – அது என்ன?







## படக்குறியீடுகளைக் கொண்டு சொற்களைக் கண்டுபிடிக்கலாமா?




1. சினம்____________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________


www.CBSETAMIL.com

## சொற்களை உரிய வரிசையில் எடுத்து எழுதுவோம்

**கண்ணாடித்துண்டு, நெகிழிப்பை, காகிதத்தாள், சணல்பை, பீங்கான் தட்டு, இலை**




1. ____________
2. ____________
3. ____________




1. ____________
2. ____________
3. ____________

## இங்கு எது பயன்படும்? எழுதுவோம்


கயிறு


நூல்


குச்சி


நூல்



____________


____________


____________


____________


____________


____________


____________

### சொல்லக் கேட்டு எழுதுவோம்

____________ ____________ ____________

____________ ____________ ____________

www.cbsetamil.com

# 11 காட்டில் திருவிழா

**என் நினைவில்**


## காட்டில் திருவிழா

காட்டில் திருவிழா நடந்தது. எல்லாரும் மகிழ்ச்சியாய் இருந்தனர். பல்வேறு போட்டிகள் நடந்தன. என்னென்ன போட்டிகள் நடந்தன? யாரெல்லாம் போட்டி போட்டனர் தெரியுமா?

பளு தூக்கும் போட்டி




தேன் உறிஞ்சும் போட்டி




அசையாமல் நிற்கும் போட்டி




நீர் அருந்தும் போட்டி




மரத்தைக் கொத்தும் போட்டி




வலை பின்னும் போட்டி




வளை தோண்டும் போட்டி





பாறை ஏறும் போட்டி







www.CBSETAMIL.com

## இவர்கள் என்ன போட்டியிடுவார்கள்? எழுதுவோம்









## போட்டியில் பரிசு பெற்றவர் யார்? பெயர் எழுதுவோம்

2



வண்ணத்துப் பூச்சி















## அடைமொழியோடு எழுதுவோம்

**பெரிய, சிறிய, வண்ண வண்ண, அழகான, பச்சை வண்ண, வெள்ளை வண்ண, மஞ்சள் வண்ண**



 அழகான வாத்து

 ---------------------

 ---------------------

 ---------------------


 ---------------------

 ---------------------


www.CBSETAMIL.com

www.cbsetamil.com

## அறிவிப்புப்பலகையை உணவகத்துடன் இணைப்போம்



கேட்டதும் கிடைக்கும்
கேழ்வரகுக் கூழ்



வாங்க... வாங்க...
பாசிப்பருப்புப் பாயசம்
குடிக்கலாம்



சுக்கு, மல்லித் தேநீர்
சுடச்சுட உள்ளது



இனிப்பான கருப்பட்டிப்
பணியாரம் இங்குக் கிடைக்கும்

## பொருத்தமான குறியீடுகளைச் சேர்த்துச் சொல் உருவாக்குவோம்

| ் | ா | ி | ீ | ெ | ே |
|---|---|---|---|---|---|

செங்கல்



மன



க ள ன



ம ன



ம தரம




வ ச ற




www.CBSETAMIL.com

www.cbsetamil.com

## எழுத்துகளைச் சேர்த்துத் தொடர் உருவாக்குவோம்






நீ வா.

நீ பூ வை.



## இணைத்துத் தொடர் எழுதுவோம்

செம்பருத்தி
செவ்வந்தி
மல்லிகை
சூரியகாந்தி
முல்லை

→

மஞ்சள்
சிவப்பு
வெள்ளை

→

வண்ணத்தில் இருக்கிறது

செம்பருத்தி சிவப்பு வண்ணத்தில் இருக்கிறது.


www.CBSETAMIL.com

# 12 கொழுக்கட்டை ஏன் வேகல?



கொழுக்கட்டை கொழுக்கட்டை ஏன் வேகல?
அடுப்பு எரியல நான் வேகல

அடுப்பே அடுப்பே ஏன் எரியல?
மழை பெய்ஞ்சுது நான் எரியல

மழையே மழையே ஏன் பெய்ஞ்ச?
புல்லு வளர நான் பெய்ஞ்சேன்

புல்லே புல்லே ஏன் வளர்ந்த?
மாடு தின்ன நான் வளர்ந்தேன்

மாடே மாடே ஏன் தின்ன?
பாலு சுரக்க நான் தின்னேன்




பாலே பாலே ஏன் சுரந்த?
குழந்தை அழுதது நான் சுரந்தேன்

குழந்தையே குழந்தையே ஏன் அழுத?
எறும்பு கடிச்சது நான் அழுதேன்

எறும்பே எறும்பே ஏன் கடிச்ச?
என் புத்துக்குள்ள கைய விட்டா
நான் சும்மா இருப்பேனா?







சிந்தித்துப் பேசலாமா?

பேசுவது போன்றே எழுதுவோமா? எழுதுவது போன்றே பேசுவோமா? என்பது குறித்துக் கலந்துரையாடுங்கள்.

என் மேடை! என் பேச்சு!

என் வீட்டில் எனக்குப் பிடித்தவை.

## பயிற்சி

### பாடலில் இருமுறை வந்த சொற்களை எடுத்து எழுதுவேன்







| | | | | |
|---|---|---|---|---|
| மாடே மாடே | .......................... | .......................... | .......................... | .......................... |
| .......................... | .......................... | .......................... | .......................... | .......................... |

### பொருத்துவேன்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாடு தின்ன | – | குழந்தை அழுதது |
| 2. | எறும்பு கடிக்க | – | பால் சுரந்தது |
| 3. | குழந்தை குடிக்க | – | புல் வளர்ந்தது |

### இணைப்பேன்

| | |
|---|---|
| மரம் வளர்ந்தால் | உணவு கிடைக்கும் |
| புல் வளர்ந்தால் | மழை பெய்யும் |
| உழவு செய்தால் | வெளிச்சம் வரும் |
| விளக்கு எரிந்தால் | மாடு தின்னும் |


www.CBSETAMIL.com

## பாடலை நிறைவு செய்வோம்

பாப்பா பாப்பா என்ன வேண்டும்?

பழம் வேண்டும்

என்ன பழம்?

______________________

என்ன வாழை?


பச்சை வாழை

என்ன பச்சை ?

மா பச்சை

என்ன மா ?

______________________





## இடமிருந்தும் வலமிருந்தும் படித்துப் பார்ப்போம்; விடுபட்டதை நிரப்புவோம்

கற்க

குடகு

மாமா

மாறுமா

தேடாதே

கைரேகை

மேளதாளமே

மாடு ஓடுமா

தேரு வருதே

தா ___ தா

பா ___ பா

# பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு அறிவோம்

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| பாம்புப்புத்து | பாம்புப்புற்று |
| பட்டம் பறக்குது | பட்டம் பறக்கிறது |
| தண்ணீர் குடிச்சான் | தண்ணீர் குடித்தான் |
| பூனை ஓடுச்சு | பூனை ஓடியது |
| அப்பளம் உடைஞ்சது | அப்பளம் உடைந்தது |
| கை வலிச்சுது | கை வலித்தது |


## பொருத்துவேன்

| | |
|---|---|
| வேகல | பெய்தது |
| பெய்ஞ்சுது | வேகவில்லை |
| எரியல | புல் |
| புல்லு | எரியவில்லை |



www.CBSETAMIL.com

## வண்ணமிட்டு மகிழ்வேன்





### செயல்திட்டம்

உங்களுக்குத் தெரிந்த பெரியவர்களிடம் நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டறிந்து வந்து வகுப்பறையில் பாடுக.

# 13 எழில் கொஞ்சும் அருவி

(அங்கவை, சங்கவை இருவரும் சித்தப்பா, சித்தி வீட்டிற்குச் செல்கிறார்கள்)




சித்தி — வாருங்கள், செல்லங்களே! வீட்டில் எல்லாரும் நலமா?

அங்கவை, சங்கவை — நலமாய் உள்ளோம் சித்தி, நீங்கள் நலமா?

சித்தப்பா — நீங்கள் இருவரும் கல்விச் சுற்றுலா சென்று வந்தீர்களாமே! அதைப் பற்றிக் கூறுங்கள் கேட்போம்.

அங்கவை — நாங்கள் தருமபுரி மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஒகேனக்கல் அருவிக்குப் போய்வந்தோம். அதைப்பற்றிக் கூறுகிறோம் கேளுங்கள்.

சங்கவை — எழில் கொஞ்சும் மலையில் உள்ள அந்த அருவி, பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 1500 அடி உயரத்தில் உள்ளது.

சித்தப்பா — மலையின் உச்சியிலிருந்து வெள்ளியை உருக்கி ஊற்றியது போல பேரிரைச்சலுடன் கீழ் நோக்கி விழும் அருவி பார்க்கப் பார்க்க அழகு, இல்லையா?

அங்கவை — ஆம் சித்தப்பா அழகோ அழகு!

சித்தப்பா — அதற்கு ஒகேனக்கல் என்ற பெயர் எப்படி வந்ததாம்? தெரிந்து கொண்டீர்களா?







**அங்கவை** ஒகேனக்கல் என்பதற்குப் புகையும் கல்பாறை எனப்பொருள். கன்னடத்தில் 'ஒகே' என்பது புகை ஆகும். அருவி நீர் கல்பாறையில் பட்டுத் தெறித்து, வெண்புகை போலத் தோற்றம் அளிப்பதால்தான் இப்பெயர் வந்ததாம்.

**சங்கவை** பயணிகளைப் பெரும் ஆரவாரத்தோடு வரவேற்கும் அருவியில் தண்ணீர் கொட்டும் காட்சி அற்புதமாக இருக்கும்.

**சித்தி** அவ்விடத்திற்கு எதன் மூலம் பயணம் செய்தீர்கள்?

**சங்கவை** அந்தக் கண்கொள்ளாக் காட்சியினைக் கண்டுகளிக்கப் பரிசலில் சென்றோம். என்னே அருமை!

**சித்தப்பா** பரிசலில் செல்லும் வழியில் என்னென்ன பார்த்தீர்கள்?

**அங்கவை** மலை நடுவே பாதையமைத்து அருவி நீர் ஓடும் காட்சி வெண்ணெய் உருகுவதுபோல தெரிந்தது.

**சங்கவை** இரு மலைகளுக்கு இடையே தொங்குபாலத்தில் சென்றோம்.

**அங்கவை** 100 அடி உயரத்திலிருந்து விழும் அருவியில் குளித்தது மகிழ்ச்சியாக இருந்தது. நாங்கள் எல்லாரும் நீராடி விட்டு, மீண்டும் பரிசலில் கரைக்கு வந்தோம். உணவு உண்ட பின், மான் பூங்காவிற்குச் சென்றோம். அங்கு துள்ளித்திரியும் மான் கூட்டம், முதலைப் பண்ணை முதலியவற்றைப் பார்த்தோம்.

**சங்கவை** சித்தி, அங்கே மிகப் பழைமையான தேசநாதீஸ்வரர் கோவில் உள்ளது. அது அதியமான் காலத்தைச் சேர்ந்தது என்பதைக் கல்வெட்டைப் படித்து, அறிந்து கொண்டோம்.

**சித்தப்பா** பாராட்டுகள், குழந்தைகளே! அருவியின் அழகைக் கண்டுகளித்தது மட்டுமின்றி, அங்குள்ள பொதுஅறிவுச் செய்திகளையும் திரட்டியிருக்கிறீர்கள்.

**சித்தி** நன்றி குழந்தைகளே! எங்களுக்கும் ஒகேனக்கலை நேரில் சென்று பார்த்த ஆனந்தத்தை உண்டாக்கிவிட்டீர்கள்! நாமும் குடும்பத்துடன் ஒருமுறை சென்று வருவோம்.



**சிந்தித்துப் பேசலாமா?**

சுற்றுலாத் தலங்களில் செய்ய வேண்டியவை, செய்யக்கூடாதவை குறித்துக் கலந்துரையாடுங்கள்.

அருவி, ஏரி, நதி, ஆறு, பூங்கா, பண்ணை போன்ற இடங்களுக்குச் சென்று வந்த அனுபவம்.

**என் மேடை!**

**என் பேச்சு!**



## பயிற்சி

### சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. ஒகேனக்கல் அருவியில் நீர் வீழ்வது ............................ உருக்கி ஊற்றுவது போல் இருந்தது.
   (அ) தங்கத்தை (ஆ) வெள்ளியை
   (இ) இரும்பை (ஈ) கற்பாறையை
2. **ஒகேனக்கல்** என்ற சொல்லின் பொருள் ............................
   (அ) பவளப்பாறை (ஆ) வழுக்குப்பாறை
   (இ) பனிப்பாறை (ஈ) புகையும் கல்பாறை
3. **வெண்புகை** என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............................
   (அ) வெண் + புகை (ஆ) வெ + புகை
   (இ) வெண்மை + புகை (ஈ) வெம்மை + புகை
4. **பாதை + அமைத்து** இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ............................
   (அ) பாதைஅமைத்து (ஆ) பாதையமைத்து
   (இ) பாதம்அமைத்து (ஈ) பாதயமைத்து
5. **தோற்றம்** இச்சொல்லின் எதிர்ச்சொல் ............................
   (அ) தொடக்கம் (ஆ) மறைவு
   (இ) முதல் (ஈ) ஆரம்பம்

### வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. ஒகேனக்கல் பகுதியில் நாம் பார்க்கக்கூடிய இடங்களின் பெயர்களை எழுதுக.
2. ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி, பார்ப்பதற்கு எப்படி இருந்தது?
3. அங்கவை, சங்கவை பார்த்த மிகப் பழைமையான கோவிலின் பெயர் என்ன?
4. ஒகேனக்கல் அருவி எங்கே அமைந்துள்ளது?

### அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுவேன்

1. எழில் – ____________ 3. நீராடி – ____________
2. கண்டுகளிக்க – ____________ 4. ஆனந்தம் – ____________

www.cbsetamil.com

## பொருத்தமான சொல்லால் நிரப்புவோம்

1. அருவி _____________ (மழை/மலை) உச்சியிலிருந்து விழுந்தது.
2. பழமரம் ஆற்றின் _____________ (கறை/கரை) ஓரம் இருந்தது.
3. வலப்பக்கச் சுவரின் மேல் _____________ (பல்லி/பள்ளி) இருக்கிறது.
4. ஆதிரைக்கு நல்ல _____________ (வேலை /வேளை) கிடைத்துள்ளது.

## படங்களை இணைத்துச் சொற்களைக் கண்டுபிடிப்போம்




பனி ............. கரடி .............

பனிக்கரடி




............. .............




............. .............




............. .............


www.CBSETAMIL.com

## இன எழுத்துகள் – அறிவோம்

பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, கால அளவு, வடிவம் முதலியவற்றில் சில எழுத்துகள் ஒத்துப்போகின்றன. அவற்றை இனஎழுத்துகள் என்று கூறுவர். சில இனஎழுத்துகள் சொல்லில் ஒன்றாகச் சேர்ந்து வரும்.

### உயிரெழுத்துகளுக்குள் இன எழுத்துகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ – அ | ஈ – இ | ஊ – உ | ஏ – எ | ஓ – ஒ | ஐ – இ | ஔ – உ |

### மெய்யெழுத்துகளுக்குள் இன எழுத்துகள்

ஒவ்வொரு வல்லின எழுத்துக்கும் ஒவ்வொரு மெல்லின எழுத்து இன எழுத்தாக வரும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் – ங் | ச் – ஞ் | ட் – ண் | த் – ந் | ப் – ம் | ற் – ன் |

ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய இடையின எழுத்துகளில் ஒவ்வொரு எழுத்திற்கும் அந்த எழுத்தைத் தவிர மற்ற ஐந்து எழுத்துகளும் இன எழுத்தாக வரும்.

(எ.கா.) ய் என்ற எழுத்திற்கு ர், ல், வ், ழ், ள் ஆகிய எழுத்துகள் இன எழுத்தாக வரும். அதைப் போலவே பிற ஐந்து எழுத்துகளுக்கும் வரும்.

### இன எழுத்துகள் வரும் சொற்களைப் படித்துப் பார்ப்போம்


சங்கு


மஞ்சள்


பந்து


வண்டு



பம்பரம்


குன்று

### இன எழுத்துகள் வரும் சொற்களை நிரப்புவேன்


செ ___ ___ ருத்தி


க ______


சு ______ ல்


குர ______



இ ______


ஆ ______

# 14 கல்வி கண் போன்றது

விரியூர் கிராமத்திலுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அன்று கிராமசபைக் கூட்டம். ஊராட்சி மன்றத் தலைவர் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார். சிறுதொழில் தொடங்குவதற்கான உதவித்தொகை வழங்கும் அரசின் திட்டம் குறித்துப் பேசினார். இத்திட்டத்தின்கீழ் யார் யாருக்கெல்லாம் உதவித்தொகை வந்திருக்கிறதோ அவர்களின் பெயர்களைப் படித்தார்.

பொன்வண்ணன் தன்னுடைய பெயர் வருகிறதா என ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், கடைசி வரை அவர் பெயர் வரவேயில்லை.





பொன்வண்ணன், தலைவரிடம் சென்றார். "ஐயா! எனக்கு ஏன் உதவித்தொகை இல்லை? நானும் பண வசதியில்லாமல் மிகவும் துன்பப்படுகிறேனே..." என்று கேட்டார்.

"யாருக்கெல்லாம் பண உதவி தேவையோ, அவர்களுக்கான கூட்டம் பற்றி உங்களுக்கு அஞ்சல் மூலம் தெரிவித்து இருந்தோமே! நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை?" என்றார் தலைவர்.

"ஆமாம். போன வாரம் அஞ்சல்காரரர் கொடுத்தார். படிக்கத் தெரியாததால் அப்படியே வைத்துவிட்டேன்" என்றார் பொன்வண்ணன்.

"என்னப்பா! உனக்குத்தான் படிக்கத் தெரியல, ஆனா, உன் பையன்தான் பள்ளியிலே படிக்கிறானே, அவனுக்கு எப்படித் தெரியாமல் போகும்?" என்று கேட்டார் தலைவர்.



பொன்வண்ணன் சற்றுக் குற்ற உணர்வோடு தலை குனிந்தார். "நான் வைத்துள்ள மிதிவண்டி பழுதுபார்க்கும் கடையில் எனக்கு உதவி செய்வதற்காக, அவனை அடிக்கடி பள்ளிக்கு விடுப்பு எடுக்கச் செய்தேனே, அதனால்தானோ என்னவோ அவனுக்குச் சரியாக எழுதவும் படிக்கவும் தெரியாமலே போய்விட்டது. அவனுடைய ஆசிரியரும் இதைப்பற்றி என்னிடம் அடிக்கடி கூறி இருந்தார். நான்தான் தப்பு செய்துவிட்டேன். என் மகனை இப்படிப் படிக்கத் தெரியாதவனாக ஆக்கிவிட்டேன்" என்று எண்ணியபடி வருத்தத்துடன் நின்றார் பொன்வண்ணன்.


நான் படிக்காதவன் ஆகிவிட்டேன்; என் மகனாவது நன்கு படித்து வாழ்வில் முன்னேறட்டும்; வேலைக்காக இனி நான் என் மகனை பள்ளியைவிட்டு நிறுத்த மாட்டேன்; தினமும் பள்ளிக்கு அனுப்புவேன் என்று எண்ணியவாறு ஊராட்சி மன்றத் தலைவருக்கு, நன்றி கூறிவிட்டு அங்கிருந்து நடக்கத் தொடங்கினார் பொன்வண்ணன்.



**சிந்தித்துப் பேசலாமா?**

கல்வியினால் ஏற்படும் சிறப்புகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

பள்ளியில் எனக்குப் பிடித்தவை



# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. துன்பம் இச்சொல்லின் எதிர்ச்சொல் ..............................

(அ) இன்பம் (ஆ) துயரம்

(இ) வருத்தம் (ஈ) கவலை

2. உதவித்தொகை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............................

(அ) உதவ + தொகை (ஆ) உதவிய + தொகை

(இ) உதவு + தொகை (ஈ) உதவி + தொகை

3. யாருக்கு + எல்லாம் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ........................

(அ) யாருக்கு எலாம் (ஆ) யாருக்குல்லாம்

(இ) யாருக்கல்லாம் (ஈ) யாருக்கெல்லாம்

4. வாழ்க்கையில் முன்னேற உதவுவது ..............................

(அ) சோம்பல் (ஆ) பொய்

(இ) தீமை (ஈ) கல்வி

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. ஊராட்சி மன்றத் தலைவர் கிராமசபைக் கூட்டத்தில் எதனைக் குறித்துப் பேசினார்?

2. பொன்வண்ணனுக்கு உதவித்தொகை ஏன் கிடைக்கவில்லை?

## சொல்லக்கேட்டு எழுதுவோம்

## அறிந்துகொள்வோம்

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றமாகும். இதனை வலியுறுத்தும் விதமாகக் குழந்தைத்தொழிலாளர் ஒழிப்புநாள் ஆண்டுதோறும் ஜூன் 12 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது.


## எதற்காக, எங்கே செல்வோம்? இணைப்போம்

| | |
|---|---|
| பாதுகாப்பு தேடிச் செல்வோம் | பேருந்து நிலையம் |
| கல்வி கற்கச் செல்வோம் | மருத்துவமனை |
| மருத்துவம் பார்க்கச் செல்வோம் | காவல் நிலையம் |
| அஞ்சல்தலை வாங்கச் செல்வோம் | பள்ளிக்கூடம் |
| பயணம் செய்யச் செல்வோம் | அஞ்சல் நிலையம் |

www.cbsetamil.com

## எழுத்துகளைக்கொண்டு சொற்களை உருவாக்குவோம்

1. சுற்றம்
2. 
3. 
4. 
5. 
6. 




## பாடி மகிழ்வோம்



பப்பரப்பா வண்டி
பனங்காய் வண்டி
ஒத்தையடிப் பாதையிலும்
ஓரம் போகும் வண்டி
புகையில்லா வண்டி
புழுதி தரா வண்டி
எண்ணெய் இல்லா வண்டி
ஏறிக் கோடா பாண்டி


www.CBSETAMIL.com

# 15 வீம்பால் வந்த விளைவு

ஓர் ஊரில் வணிகர் ஒருவர் இருந்தார். அவர் குதிரையில் சென்று வாணிகம் செய்து வந்தார். ஒருநாள் அன்றைய வேலையை முடித்துவிட்டுக் களைப்புடன் வந்த அவர், சற்றுநேரம் ஓய்வு எடுக்க நினைத்தார். தனது குதிரையை அங்கிருந்த மரத்தடியில் கட்டிவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.

அச்சமயம் வீரர் ஒருவர், தனது குதிரையுடன் அதே மரத்தடியில் ஓய்வெடுக்க வந்தார். வணிகர் அந்த வீரரிடம், "உங்கள் குதிரையைச் சற்றுத் தள்ளிக் கட்டுங்கள். ஏனெனில், எனது குதிரை முரட்டுத்தனமானது" என்றார். அதற்கு வீரர், "முடியாது, நான் இங்கேதான் கட்டுவேன்" என்று சொல்லிக் குதிரையைக் கட்டிவிட்டு உணவு உண்ணச் சென்றார்.

வணிகர் கண் அயர்ந்துவிட்டார். வீரர் உணவு உண்ணும் இடைவேளையில் வணிகரின் குதிரை, வீரரின் குதிரையை எட்டி உதைத்துத் தள்ளிவிட்டது. அதனால், வீரருடைய குதிரையின் கால் உடைந்துவிட்டது. வீரர் உடனே வணிகரை எழுப்பினார். "என் குதிரையின் கால் உன் குதிரையினால் உடைந்துவிட்டதால், எனக்கு நஷ்டஈடு கொடு" என்று வணிகரிடம் கேட்டார். அதனை வணிகர் ஏற்றுக்கொள்ளவில்லை. "நான் கட்டும்போதே என் குதிரையை முரட்டுக் குதிரை என்றேன். நீதானே நான் சொன்னதைக் கேட்காமல் கட்டினாய்?" என்று வணிகர் மறுத்துவிட்டார்.




"வணிகரே வாரீர் நீதிபதியிடம் செல்லலாம்" என்றார் வீரர். இருவரும் நீதிபதியிடம் சென்றனர். வீரர் அவரிடம் நடந்ததைச் சொன்னார். நீதிபதி, வீரர் சொன்னதைக் கேட்டுவிட்டு, வணிகரிடம் "என்ன நடந்தது?" எனக் கேட்டார். வணிகரோ, பதில் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். உடனே நீதிபதி, "வணிகர் ஊமை போலிருக்கிறதே, காதும் கேட்கவில்லையோ, பலமுறை கேட்டும் பதில் சொல்லாமல் இருக்கிறாரே" என்றார்.



அதற்கு வீரர், "ஐயா! அவர் பேசுவார். அவர்தான், எனது குதிரை முரட்டுத்தனமானது, உனது குதிரையை அருகில் கட்டாமல் தூரத்தில் கட்டு எனக் கூறினார். நான்தான், எனது குதிரை வீரக்குதிரை என்று சொல்லிக் கட்டி வைத்தேன்" எனக் கூறி முடித்தார்,

வீரர் கூறியதைக் கேட்ட நீதிபதி "வீரரே வணிகர் எதுவும் கூறத் தேவையில்லை. நீயே உனது குற்றத்தை ஒப்புக் கொண்டாய். வீம்புக் குணம் படைத்த உனக்கு, வணிகர் எந்த வகையிலும் நஷ்டஈடு தரத் தேவையில்லை" என்று தீர்ப்பு கூறினார்.

நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டதும், வீம்புக் குணம் படைத்த வீரர் முகத்தில் அசடு வழிந்தது. அதைக்கேட்ட வணிகர், "ஐயா நீதிபதி அவர்களே! நான் மௌனமாய் இருந்ததற்கு மன்னித்துவிடுங்கள்; உண்மையைப் புரிந்துகொண்டு நல்ல தீர்ப்பளித்தீர்கள்; மிகவும் நன்றி!" என்று கூறினார்.

**நீதிக் கருத்து: வீம்பு செய்தால் துன்பம் உண்டாகும்.**



**சிந்தித்துப் பேசலாமா?**

வீம்பு செய்தல், அடம் பிடித்தல் போன்றவற்றால் ஏற்படும் விளைவுகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

**என் மேடை! என் பேச்சு!**

எனது நண்பருக்கு ஏற்பட்ட சிக்கலைச் சரிசெய்த அனுபவம்

# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. ஓய்வெடுக்க சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............................

(அ) ஓய் + எடுக்க (ஆ) ஓய்வு + வெடுக்க

(இ) ஓய்வு + எடுக்க (ஈ) ஓய்வெ + எடுக்க

2. வீரம் + குதிரை இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..............................

(அ) வீரம் குதிரை (ஆ) வீரகுதிரை

(இ) வீர் குதிரை (ஈ) வீரக்குதிரை

3. பதில் என்ற சொல்லின் எதிர்ச்சொல் .......................

(அ) கேள்வி (ஆ) விடை

(இ) பொருள் (ஈ) சொல்

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. வணிகர் எதில் சென்று வாணிகம் செய்தார்?

2. வணிகர், வீரரிடம் என்ன கூறினார்?

3. வணிகரின் குதிரை, வீரரின் குதிரையை என்ன செய்தது?


4. 'வீம்பால் வந்த விளைவு' இக்கதையிலிருந்து உணர்ந்து கொண்ட கருத்து யாது?

## பொருத்துவேன்

| | | | |
|---|---|---|---|
| 1. | வாணிகம் செய்பவர் | – | குதிரை |
| 2. | எட்டி உதைத்தது | – | வீரர் |
| 3. | வீம்பு பிடித்தவர் | – | நீதிபதி |
| 4. | தீர்ப்பு கூறியவர் | – | வணிகர் |

## கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிட்டு எழுதுவோம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ | ணி | க | ர் | இ | உ | நீ |
| கி | ப | ம | ரு | வ | நூ | தி |
| த | ன் | கு | தி | ரை | ச் | ப |
| ஒ | கா | ல் | னி | தீ | செ | தி |
| ய் | வீ | ர | ர் | மி | ல் | தை |
| வு | கு | ண | ம் | து | ங் | வ் |




## முதலெழுத்தை மாற்றிச் சொல்லை உருவாக்கி எழுதுவோம்

| | |
|---|---|
| சிரி | நரி, பூரி, கீரி, பொரி |
| வில் | |
| படம் | |
| பார் | |
| ஆறு | |

## பொருத்தமான சொல்லால் நிரப்புவோம்

ஒளிர்மதி தோட்டத்தில் பூ பறித்துக்கொண்டு இருந்தாள். _______ கையில் ஒரு பூக்கூடை இருந்தது. அப்போது பரணி அங்கு வந்தான். _______ கையில் இரண்டு பொம்மைகள் இருந்தன. _______ பார்ப்பதற்கு அழகாக இருந்தன. ஒளிர்மதி, பொம்மையின் தலையில் செம்பருத்திப் பூ வைத்தாள். _______ சிவப்பு வண்ணத்தில் அழகாக இருந்தது. பிறகு, _______ மாமர ஊஞ்சலில் விளையாடினார்கள்.




## பாடலிலிருந்து உணவுப் பொருள்களின் பெயர்களை எழுதுவோம்

பருப்பு அடை பாரம்மா
பதமாய் எடுத்து உண்ணம்மா
இனிப்புப் பணியாரம் வேணுமா
இங்கு வந்து பாரம்மா
வெள்ளை நிற உப்புமா
வேண்டும் மட்டும் தின்னம்மா
கரக் முரக் முறுக்கையே
கடித்துத் தின்னு நொறுக்கியே
சுவை மிகுந்த கொழுக்கட்டை
சூடாய் இருக்கு தட்டிலே!
வெல்லம் தேங்காய் சேர்த்துமே
வெண்ணெய்ப் பிட்டும் ஈர்க்குமே !

| | |
|---|---|
| பருப்பு அடை | |
| | |
| | |
| | |

# 16 நூலகம்




மாமா... மாமா... என அழைத்தபடி தேனருவி வீட்டிற்குள் வந்தாள்.

**மாமா** என்னம்மா! தேனருவி ஏன் இப்படி ஓடி வருகிறாய்?

**தேனருவி** நான் வழக்கமாகப் பள்ளிக்கூடம் போகும்வழியில் உள்ள ஒரு கட்டடத்தைத் தோரணம் கட்டி அழகுபடுத்தியிருந்தார்கள். அதில் நூலகம் என்று எழுதியிருக்கு. அப்படின்னா... என்ன மாமா....?

**மாமா** அதுவா! நிறைய நூல்களை வரிசையாக அடுக்கி வைத்திருக்கும் இடம்தான் நூலகம். அது ஒரு பொது இடம். அங்கு அனைவரும் வந்து புத்தகம் படிப்பாங்க! இன்று ஆகஸ்டு 12, 'நூலக தினம்' அதைக் கொண்டாடுவதற்காக நூலகத்தை அழகுபடுத்தியிருப்பார்கள்.

**தேனருவி** அப்படியா? நாமும் போகலாமா?

**மாமா** சரி தேனருவி! வா போகலாம்.

**தேனருவி** நூலகத்தைப் பற்றி எனக்கு விளக்கமாகச் சொல்லுங்க... மாமா.

**மாமா** சொல்கிறேன் கேள், 'நூல் + அகம் = நூலகம்'. நூலகத்தை நூல் நிலையம், புத்தகச் சாலை என்றும் கூறலாம்.

**தேனருவி** மாமா இங்கு என்னென்ன நூல்கள் இருக்கும்?

கேட்கும் செய்திகளைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துதல்


www.CBSETAMIL.com




மாமா உங்களைப் போன்ற குழந்தைகளுக்குத் தனிப்பிரிவே இருக்கிறது. அங்கு நிறைய புத்தகங்கள் உள்ளன. குழந்தைப்பாடல் நூல்கள், படக்கதைகள், கதைப் புத்தகங்கள், விளையாட்டு நூல்கள், புதிர் நூல்கள், ஓவியம், படைப்புக்கான நூல்கள் போன்ற நூல்கள் அங்கே இருக்கின்றன. அது மட்டுமல்ல பெரியவர்களுக்குப் பல்வேறு துறை சார்ந்த நூல்களும் இருக்கின்றன. நூல்கள் மட்டுமின்றி நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் ஆகியவையும் இடம்பெற்றிருக்கும்.

தேனருவி அடேங்கப்பா! நூலகத்தில் இவ்வளவு வகை நூல்களா? அது சரி மாமா நூலகத்தினால் நமக்கு என்ன பயன்?

மாமா ம்... என் செல்லக் குட்டி கேட்டால் சொல்லாமல் இருப்பேனா? இங்கு வந்து நமக்குத் தேவையான அல்லது பிடித்த நூல்களை எடுத்துப் படிக்கலாம். நூலகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தால் நூல்களை வீட்டிற்கே கொண்டு சென்று படிக்கலாம். ஆனால் குறிப்பிட்ட நாளில் புத்தகங்களைத் திருப்பி அளித்துவிட வேண்டும்.

தேனருவி மாமா! நூலகம் பற்றி நிறைய செய்திகளைத் தெரிந்துகொண்டேன்.

மாமா நூலகத்தில் உள்ள 'வாசகர் வட்டம்' மூலமாக நூலக தினத்தன்று குழந்தைகளுக்கான போட்டிகள் அனைத்து நூலகங்களிலும் நடத்தப்படுகின்றன. போட்டிகளில் கலந்து கொள்வோருக்காகவும் போட்டித் தேர்வினை எழுதுவோருக்காகவும் தனியே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. புத்தகம் படிக்கும் பழக்கத்தினை அனைவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.


www.CBSETAMIL.com

www.cbsetamil.com



**தேனருவி** நன்றி மாமா! நான் நம் வீட்டில் ஒரு "சிறிய நூலகம்" அமைப்பேன். அதில் நிறைய நூல்களைச் சேகரித்து வைத்துப் படிப்பேன்.

**மாமா** ஆகா! அருமை நான் உனக்கு நூல்களைப் பரிசளிக்கிறேன்.

## அறிந்துகொள்வோம்

- படிப்புதான் ஒருவன் உயர வழி
  – காமராசர்
- புத்தகங்கள் படிப்பதையே வழக்கமாக்குங்கள்.
  – அப்துல்கலாம்

**சிந்தித்துப் பேசலாமா?**

நூலகத்தில் நடந்து கொள்ளும் முறை, உறுப்பினர் ஆகும் முறை, பள்ளி நூலகம், பொது நூலகம் போன்றவற்றைப் பயன்படுத்துதல் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

**என் மேடை! என் பேச்சு!**

நான் படித்த புத்தகம்



www.CBSETAMIL.com

## பயிற்சி

### சரியான விடையைத் தெரிவு செய்வேன்?

1. நூல் இச்சொல் உணர்த்தும் பொருள் ........................................

(அ) புத்தகம் (ஆ) கட்டகம்

(இ) ஒட்டகம் (ஈ) கோல்

2. நூலகம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............................

(அ) நூல் + அகம் (ஆ) நூல + அகம்

(இ) நூ + அகம் (ஈ) நூல + கம்

3. புத்தகச்சாலை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................................

(அ) புத்தக + சாலை (ஆ) புத்தகச் + சாலை

(இ) புத்த + சாலை (ஈ) புத்தகம் + சாலை

4. அகம் இச்சொல்லின் எதிர்ச்சொல் ..................................

(அ) உள்ளே (ஆ) தனியே

(இ) புறம் (ஈ) சிறப்பு

5. நாள் + இதழ்கள் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ............................

(அ) நாள்இதழ்கள் (ஆ) நாளிதழ்கள்

(இ) நாளீதழ்கள் (ஈ) நாளிதழ்கல்

### வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. நூலகத்தின் வேறு பெயர்கள் யாவை?

2. நூலக தினமாகக் கொண்டாடப்படும் நாள் எது?

3. நூலகத்தில் குழந்தைகளுக்கான சிறப்பம்சங்கள் என்னென்ன உள்ளன?

4. நீ நூலகத்திற்குச் சென்று வந்ததைப் பற்றி எழுதுக.


www.CBSETAMIL.com

## எழுத்துகளை முறைப்படுத்தி சொற்களை உருவாக்குவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டி | ப | | | | |
| ள் | ப | ளி | | | |
| நூ | க | ம் | ல | | |
| த் | க | பு | த | ம் | |
| ள் | ழ | ந் | கு | தை | க |

## சொல்லுக்குள் சொல் கண்டுபிடித்து எழுதுவோம்

எ.கா.: வரிக்குதிரை – வரி, குதிரை, குதி, திரை, வரை

திருநெல்வேலி

கடிகாரம்

பனிப்புயல்

பாய்மரக்கப்பல்



### செயல்திட்டம்

**அருகில் உள்ள நூலகத்திற்குச் சென்று பிடித்த நூலைப் படித்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

## சொல்லுக்குச்சொல் கூறுவோமா?



குழந்தைகள் வட்டமாக நிற்க வேண்டும். ஒரு குழந்தை வட்டத்திற்கு வெளியே ஓடி வரவேண்டும். ஓடி வரும் அக்குழந்தை வட்டத்தில் நிற்கின்ற யாராவது ஒரு குழந்தையின் முதுகில் தொட்டு ஒரு சொல்லைக் கூற வேண்டும். தொடப்பட்ட குழந்தை அந்தச் சொல்லில் முடியும் எழுத்தை முதலாகக்கொண்டு வேறு சொல்லைக் கூற வேண்டும். தொடப்பட்ட குழந்தை சொல்லைக் கூறிவிட்டால் ஓடி வந்த குழந்தையே மீண்டும் ஓடி, வேறு குழந்தையைத் தொட்டு, வேறு சொல் கூறவேண்டும். தொடப்பட்டவர் சரியாகக் கூறவில்லையென்றால் அவரே ஓடுபவராக, வட்டத்திற்கு வெளியே ஓடி வரவேண்டும். இவ்வாறே விளையாட்டைத் தொடரலாம்.

குறிப்பு: முதுகில் தொட்டுச் சொல்லும் சொல்லானது அதன் இறுதி எழுத்தை முதலாகக் கொண்டு வேறு சொல் உருவாக்கும்படி இருக்க வேண்டும். தவறான சொல்லைக் கூறினால் மீண்டும் அவரே ஓடி, வேறு சொல்லைக் கூற வேண்டும். ஒருமுறை கூறப்பட்டச் சொல்லை மற்றொரு முறை கூறக்கூடாது.

[எ.கா: விலங்கு என்று சொன்னால் குருவி என்ற ஒரு சொல்லை உருவாக்க முடியும். கடல் என்று சொன்னால் 'ல்' என்ற எழுத்தை முதலாகக் கொண்டு புதுச் சொல்லை உருவாக்க முடியாது.]

## அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| முற்றுப்புள்ளி | . | : தொடரின் முடிவில் இடவேண்டும். |
| காற்புள்ளி | , | : ஒரே தொடரில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் கூறும்போது இடவேண்டும். |
| வினாக்குறி | ? | : வினாத்தொடரின் முடிவில் இடவேண்டும். (எது, எங்கே, எத்தனை, எப்படி, என்ன, யார் போன்ற வினாச்சொற்களை அறிமுகம் செய்யுங்கள்) |
| உணர்ச்சிக்குறி | ! | : வியப்பு, மகிழ்ச்சி, சினம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொடரில் இடவேண்டும். |

www.cbsetamil.com

## படித்து உரிய நிறுத்தக்குறிகளை நிரப்புவோம்

### விளையாட்டு விழா




. , ? !

அன்பு, அமுதாவின் பள்ளியில் இன்று விளையாட்டுவிழா. இதோ, விளையாட்டுகள் தொடங்கிவிட்டன [ . ] முதல்வகுப்புக் குழந்தைகள் தவளைஓட்டம் ஓடுகின்றனர். ஆகா [ ! ] குழந்தைகள் அழகாகத் தாவித்தாவி ஓடுகிறார்கள் [ ] பிற வகுப்புக் குழந்தைகள் என்ன விளையாடுகிறார்கள் தெரியுமா? தொடர் ஓட்டம் [ ] சதுரங்கம் [ ] இசைநாற்காலி போன்ற விளையாட்டுகளை விளையாடுகிறார்கள். மாலை நேரம் வந்துவிட்டது. போட்டிகள் முடிந்தன. அதோ, அன்பு முதல்பரிசைப் பெறுகிறான். அந்தப் பரிசு என்ன [ ] அன்பிடமே கேட்டுவிடலாம். ஐ [ ] படக்கதைப் புத்தகம். இந்தப் புத்தகத்தை அன்பு மட்டுமல்ல, வகுப்பில் எல்லாரும் சேர்ந்து படித்து மகிழ்வார்கள்.


www.CBSETAMIL.com

# 17 நாயும் ஓநாயும்

பசியால் வாடி மெலிந்த ஓநாய், தின்பதற்கு ஏதாவது அகப்படுமா? என்று காடு முழுவதும் சுற்றித் திரிந்தது. அப்போது கொழுகொழு என்றிருந்த ஒரு நாய், மகிழ்ச்சியுடன் எதிரே ஓடி வருவதைப் பார்த்தது. அதனைப் பார்த்ததும் அதனுடன் பேசத் தொடங்கியது.

**ஓநாய்** நண்பா, நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்!

**நாய்** நண்பனே, மிக்க மகிழ்ச்சி. நான் சொல்கிறபடி செய்தால் நீயும் என்னைப் போலக் கொழுகொழு என்று அழகாய் இருக்கலாம். நீ இந்தக் காட்டில் இருந்து பசியும் பட்டினியுமாக ஏன் துன்பப்படுகிறாய்? என்னுடன் வெளியே வந்துவிடு. நல்ல உணவு கிடைக்கும்.

**ஓநாய்** அப்படியானால், நான் என்ன வேலை செய்ய வேண்டும்?



**நாய்** வேலை எதுவும் கிடையாது. வீட்டுக்கு வருகிற அறிமுகம் இல்லாத புதியவர்களை விரட்டியடிக்க வேண்டும். வீட்டுக்காரர்களைப் பார்த்தால் வாலை ஆட்ட வேண்டும். அவ்வளவுதான், அதற்காக உனக்கு விதவிதமான உணவுகள் கிடைக்கும். நமது தலையை வீட்டுக்காரர்கள் அன்பாகத் தடவிக் கொடுப்பார்கள். ஆகா! அது என்ன சுகம் தெரியுமா?

**ஓநாய்** ஓ! அப்படியா! அவ்வளவு சுகமான வாழ்க்கையா? தயவுசெய்து என்னையும் அழைத்துச் செல், நண்பா.

**நாய்** வா நண்பா! என்னுடன் உன்னை அழைத்துச் செல்கிறேன். இன்றிலிருந்து உனக்கு நல்ல காலம்தான்.

**ஓநாய்** இதோ, இப்போதே புறப்படுகிறேன். அது சரி, அது என்ன உன் கழுத்தில் ஒரு கருப்புப் பட்டை?

**நாய்** அது ஒன்றுமில்லை, வா.

**ஓநாய்** ஒன்றுமில்லை என்றால், கழுத்தில் எப்படிப் பட்டை வந்தது?

**நாய்** என்னைச் சங்கிலியால் கட்டிப் போடுவதற்கு வசதியாகக் கழுத்தில் போடப்பட்ட பட்டை. அவ்வளவுதான்!

**ஓநாய்** என்ன, கட்டிப் போடுகிறார்களா! அப்படியானால், உன் விருப்பப்படி எப்பொழுது வேண்டுமானாலும் வெளியே போக முடியாதா?

**நாய்** எப்பொழுதும் நம் விருப்பம்போல போக முடியாது. அதனால் என்ன?

**ஓநாய்** அதனால் என்னவா? எப்படிப்பட்ட வாழ்க்கையாய் இருந்தாலும் சரி, என் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்கமாட்டேன். வீட்டில் மாட்டிக்கொண்டு விதவிதமான உணவுகளைச் சாப்பிடுவதைவிடச் சுதந்திரமாகக் காட்டில் அலைவதே மேல், நான் போகிறேன்.

**திறன்:** முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய நிறுத்தக்குறிகளை அறிந்து படித்தல்.



**சிந்தித்துப் பேசலாமா?**

பல்வேறு விலங்குகள், பறவைகளின் இயல்புகள், தனித்திறமைகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

எனக்குப் பிடித்த பறவை/ விலங்கு ________. ஏனென்றால்...

**என் மேடை!**
**என் பேச்சு!**



# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. மகிழ்ச்சி இச்சொல் உணர்த்தும் பொருள் ........................................

   (அ) இன்பம் (ஆ) துன்பம்

   (இ) வருத்தம் (ஈ) அன்பு

2. ஒன்றுமில்லை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது. ........................................

   (அ) ஒன்று + இல்லை (ஆ) ஒன்றும் + இல்லை

   (இ) ஒன்றுமே + இல்லை (ஈ) ஒன்று + மில்லை

3. அப்படி + ஆனால் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ......................................

   (அ) அப்படியானால் (ஆ) அப்படியனால்

   இ) அப்படியினால் (ஈ) அப்படிஆனால்

4. விருப்பு என்ற சொல்லின் எதிர்ச்சொல்........................................

   (அ) வெறுப்பு (ஆ) கருப்பு

   (இ) சிரிப்பு (ஈ) நடிப்பு

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. பசியால் மெலிந்த ஓநாய் எங்குச் சுற்றித் திரிந்தது?

2. நாய், ஓநாயை எங்கு வரச் சொன்னது?

3. நாயின் கழுத்தில் என்ன இருந்தது?

## அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுவேன்

1. விதவிதமான – ___________

2. சுதந்திரம் – ___________

## சரியான தொடருக்கு ✓ குறியிடுவேன். தவறான தொடருக்கு ✗ குறியிடுவேன்

1. ஓநாய் தின்பதற்கு எதுவும் கிடைக்காமல் மெலிந்திருந்தது.
2. நாய் புதியவர்களைக் கண்டால் விரட்டியடிக்காது.
3. ஓநாயின் கழுத்தில் கருப்புப் பட்டை இருந்தது.
4. ஓநாய் சுதந்திரமாக வாழ ஆசைப்படவில்லை.
5. ஓநாயை நாய் வீட்டிற்கு அழைத்தது.

## சொற்களை இணைத்து எழுதுவோம்







1. நல்ல எண்ணம்
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________
6. ______________________________

## பொருத்தமான நிறுத்தக்குறியிடுவேன் . ! ?

1. ஆகா என்ன சுகம் தெரியுமா
2. ஒன்றுமில்லை என்றால் கழுத்தில் எப்படிப் பட்டை வந்தது
3. நல்ல உணவு உனக்கும் கிடைக்கும் என்று சொன்னது


www.CBSETAMIL.com

# 18 திருக்குறள் கதைகள்


## சரியான தீர்ப்பு

P5ACX

முன்பொரு காலத்தில் மரியாதைராமன் என்பவர் வாழ்ந்து வந்தார். அந்த ஊரில் வளவன் என்பவர் மளிகைக் கடை வைத்து வாணிகம் செய்து வந்தார்.

வளவன் பணம் ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவர். எதுவும் கொடுத்து உதவமாட்டார். அரசுக்கும் முறையாக வரி செலுத்தமாட்டார்.

இந்நிலையில், மரியாதைராமன் அவ்வூரின் புதிய நீதிபதியாக நியமிக்கப்பட்டார். மரியாதைராமன், வளவனின் இளம்வயது நண்பன். அதனால், நீதிபதி தனது நண்பன் என, வளவன் ஊர் முழுவதும் கூறிவந்தார். முறையாக வரி செலுத்தாதவர்களின் பட்டியல் நீதிபதியிடம் ஒருநாள் வழங்கப்பட்டது. நீதிபதியின் ஆட்கள் வளவனை அழைத்துச் சென்றனர். நீதிபதி தனது நண்பனாயிற்றே, தனக்குத் தண்டனை தரமாட்டார் என எண்ணியவாறே மகிழ்ச்சியாகச் சென்றார் வளவன். வளவனின் நண்பன் என்பதால் மரியாதைராமனும் எப்படித் தீர்ப்பு வழங்குவாரோ என அவரது பண்பையும் நேர்மையையும் மக்கள் சந்தேகப்பட்டனர். ஆனால், மரியாதைராமன் நண்பனாக இருந்தாலும் தவறு செய்தவர் என்பதால், முறைப்படி அவருடைய பொருள்களை அரசாங்கக் கருவூலத்தில் சேர்த்திடச் செய்தார். மேலும், வளவனுக்கு ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையும் வழங்கி உத்தரவிட்டார்.



எவ்விதச் சார்பும் இன்றி நடுவு நிலைமையோடு தீர்ப்பு வழங்கிய மரியாதைராமனை அனைவரும் பாராட்டினர்.

### குறள்

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்

நடுவுநிலைமை, குறள் 114

### விளக்கம்

ஒருவர் நடுவுநிலைமை உடையவர், இல்லாதவர் என்பது அவருக்குப்பின் நிலைத்து நிற்கும் புகழாலும் பழியாலும் அறியப்படும்.


www.CBSETAMIL.com

## காலத்தே பயிர் செய்

முன்னொரு காலத்தில் மலைச்சாமி என்ற ஏழை விவசாயி, இலந்தைக்குட்டை என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அவருக்கென்று சொந்தநிலம் ஏதும் கிடையாது. ஆனால், விவசாயம்தான் சோறு போடும் என்பதை ஆணித்தரமாக நம்பினார். அதே ஊரில் வாழ்ந்து வரும் மாதையன் என்ற செல்வந்தரின் நிலத்தைக் குத்தகைக்குக் கேட்டார். அச்செல்வந்தரும் சில நிபந்தனைகளுடன் தன் நிலத்தில் விவசாயம் செய்ய அனுமதிப்பதாகக் கூறினார். அதனை ஒப்புக்கொண்ட விவசாயி, செல்வந்தரின் நிலத்தில் விவசாயம் செய்யத் தொடங்கினார். அச்செல்வந்தர் விவசாயியின் உழைப்பைச் சுரண்டுவதிலேயே குறிக்கோளாய் இருந்தார். இருந்தபோதிலும் மலைச்சாமி நேர்மையானவராகவும் புத்திசாலியாகவும் இருந்ததால் செல்வந்தரிடம் ஏமாறவில்லை.



ஒருமுறை செல்வந்தர் விவசாயியிடம் குத்தகைக்கு ஈடாக 'மண்ணுக்கு மேலே விளைபவை எனக்கு, மண்ணுக்குக் கீழே விளைபவை உனக்கு' என்று கட்டளையிட்டார். புத்திக்கூர்மையுடன் விவசாயி, நிலக்கடலை பயிரிட்டதால் விவசாயிக்கே இலாபம் கிட்டியது. ஏமாற்றமடைந்த செல்வந்தர் அடுத்தமுறை விவசாயியை ஏமாற்ற எண்ணி நிபந்தனையை மாற்றினார். இம்முறை 'மண்ணுக்குக் கீழே விளைபவை எனக்கு, மண்ணுக்கு மேலே விளைபவை உனக்கு' என்றார். ஆராய்ந்த விவசாயி, இம்முறை நெல் பயிரிட்டார். இம்முறையும் விவசாயிக்கே இலாபம், ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார் செல்வந்தர். இதிலிருந்து எதை, எப்படி, எக்காலத்தில் செய்ய வேண்டும் என்பதை அறிந்து செய்தால் உலகையே வென்று விடலாம் என்பதை அறிய முடியும்.

### குறள்

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

காலமறிதல், குறள் 484

### விளக்கம்

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால் உலகமே வேண்டும் எனக் கருதினாலும் அது கைகூடும்.

## அன்பெனும் அருங்குணம்



ஒரு காட்டில் பெரிய மரம் ஒன்று இருந்தது. அம்மரத்தில் பறவைகளும் விலங்குகளும் வாழ்ந்து வந்தன. அங்கு இருந்த கரடி மட்டும் சேட்டைகள் பல செய்து வந்தது. பறவையின் கூட்டை எட்டிப்பார்க்கும். குஞ்சுகள் என்றும் பாராமல் 'இதோ உங்களைத் தூக்கி எறிகிறேன் பாருங்கள்' என்று கூட்டைப் பிய்த்து எறியும். குரங்குகள் வந்தால் தங்கவே இடம் தராமல் துரத்தி விட்டுவிடும். சில சமயங்களில் குட்டிக் குரங்குகளின் தலையில் குட்டு வைக்கும். அவை தலை வீங்கி அழுவதைப் பார்த்துச் சிரிக்கும். இவ்வாறு யாரிடமும் அன்பு காட்டாமல் வெறுப்புடனே நடந்து கொள்ளும். அதனால் பறவைகளும் குரங்குகளும் வேறு மரத்திற்கே சென்றுவிட்டன. ஒரு முறை வேடன் ஒருவர் விரித்து வைத்திருந்த வலையில் எதிர்பாராமல் கரடி சிக்கிக்கொண்டது. அது காடே அதிரும் வகையில் சத்தமிட்டு அலறியது. வேடன் விரித்த வலையிலிருந்து தன்னைக் காப்பாற்றும்படி கதறியது. ஆனால், ஒருவரையும் காணோம். தான் யாரிடமும் அன்பு காட்டாமல் இருந்ததுதான் இந்த நிலைமைக்குக் காரணம் என்பதை உணர்ந்து ஓவென அழுதது. இவ்வேளையில் கரடியின் சத்தம் கேட்டு வந்த பறவைகள், வேடனைக் கொத்திக் கொத்தித் துரத்தின. குரங்குகள் வலையைப் பிய்த்துக் காப்பாற்றின. அன்றுமுதல் கரடி எல்லாரிடமும் அன்பு செலுத்தத் தொடங்கியது.

### குறள்

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

அன்புடைமை, குறள் 77

### விளக்கம்

எலும்பு இல்லாத உயிரை வெயில் காய்ந்து வருத்தும். அதுபோல அன்பு இல்லாத உயிர்களை அறம் வருத்தும்.

## கல்வியே நமது செல்வம்



ஓர் ஊரில் முத்தன் என்பவர் வாழ்ந்து வந்தார். சொந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கடினமாக உழைத்துச் செல்வந்தராக உயர்ந்தார். அவருக்குப் புகழினி, மதியழகன் என்ற இரண்டு பிள்ளைகள். கல்விக்கு முதன்மை அளிக்காமல், பிள்ளைகள் இருவரையும் தொழிலில் ஈடுபடுத்த எண்ணினார். ஆனால், தந்தையின் விருப்பத்தையும் மீறி கல்லூரி வரை இருவரும் படித்து முடித்தனர். முத்தனுக்குக் கல்வியின் மேல் பெரிய ஈடுபாடோ, விருப்பமோ கிடையாது. ஆகவே, சரியாகக் கல்வி கற்காத முத்தனை அவரது வியாபாரக் கூட்டாளிகள் ஏமாற்றி விட்டனர். இதனால் வீடு, வயல், ஆடுமாடுகள் எனச் செல்வத்தை இழந்தார். ஒருவேளை உணவுக்கே துன்பப்படும் நிலைக்கு ஆளானார்.

முத்தனின் பிள்ளைகள் இருவரும் இனியும் தாமதிக்கக் கூடாது என எண்ணிப் பல நிறுவனங்களுக்கு வேலை வேண்டி விண்ணப்பித்தனர். உரிய கல்வித்தகுதி பெற்றிருந்ததால், இருவருக்கும் நல்ல வேலை கிடைத்தது.

சில நாள்களிலேயே குடும்பத்தின் வறுமை நீங்கியது. முத்தன் கல்வியின் சிறப்பினை உணர்ந்து தமது கருத்தினை மாற்றிக்கொண்டார்.

### குறள்

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

கல்வி, குறள் 400

### விளக்கம்

ஒருவருடைய நிலைத்த செல்வம் என்பது அவர் கற்ற கல்வியே ஆகும். அதனைத் தவிர வேறு எந்தச் செல்வமும் நீடித்து இருக்காது.

## உண்மையான அணிகலன்கள்



முதியவர் ஒருவர் ஆலமரத்தடியில் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார். பக்கத்து ஊருக்குச் செல்வதற்காக அவ்வழியே செல்வந்தர் ஒருவர் வந்தார். அவர் அந்த முதியவரைப் பார்த்து, 'இவ்வழியே போனால் பருத்தியூர் போய்ச் சேரலாமா?' என்று ஆணவத்துடன் உரத்த குரலில் கேட்டார். அதற்கு அந்த முதியவர் எனக்குத் தெரியாது என்று பதிலளித்தார். முணுமுணுத்துக்கொண்டே அந்தச் செல்வந்தர் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார். சற்றுநேரத்தில் மற்றொருவர் ஏராளமான ஆபரணங்கள் அணிந்துகொண்டு அங்கு வந்தார். அவர், 'என்ன முதியவரே, இந்த வழியே யாரேனும் சற்றுநேரத்திற்கு முன் போனார்களா?' என்று கேட்டார். அதற்கு முதியவர் எனக்குத் தெரியாது என்று அமர்ந்தபடியே பதில் கூறினார். எனக்கு ஊரில் எவ்வளவு செல்வாக்கு உள்ளது தெரியுமா? நான் கேட்கும்போது எழுந்து பதில் கூறமாட்டாயா? என்று முதியவரைக் கடிந்துகொண்டு சென்றார் அவர்.

மூன்றாவதாக இளைஞர் ஒருவர் அவ்வழியே வந்து முதியவரிடம் 'ஐயா, வணக்கம். நான் வழி தவறி இங்கே வந்துவிட்டேன். எனக்குப் பருத்தியூர் செல்வதற்கு தயவுசெய்து வழி கூறுங்கள்' என்றான். முதியவரும் உரிய வழியைக் கூறினார். 'ஐயா, தங்களுக்கு ஏதேனும் உதவி வேண்டுமா?' என்று கேட்டார் அந்த இளைஞர். அதற்கு அந்த முதியவர், 'வேண்டா' என மறுத்துக் கூறினார். பின்னர், இதுவரை அங்கு நடந்ததைக் கூறி, 'தம்பி, நாம் எவ்வளவுதான் செல்வச்செழிப்புடன் இருந்தாலும் பணிவுடைமையே நமக்குச் சிறந்த பண்பு' என்று கூறி, அந்த இளைஞரை வாழ்த்தி அனுப்பினார்.

### குறள்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

இனியவை கூறல், குறள் 95

### விளக்கம்

பணிவு உடையவராகவும் இனிமையான சொற்கள் பேசுபவராகவும் இருப்பதே ஒருவருக்கு மிகச்சிறந்த அணிகலன். மற்றவையெல்லாம் உண்மையான அணிகலன்கள் ஆகா.

ஆசிரியர் குறிப்பு

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள் எக்காலத்துக்கும் ஏற்ற அறவுரைக் கருத்துகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகள் உள்ளன. 133 அதிகாரங்களும் அதிகாரத்திற்குப் பத்துக் குறளென 1330 குறட்பாக்களும் உள்ளன. ஒவ்வொரு குறட்பாவும் ஈரடியால் ஆகிய வெண்பாவாகும்.

## பயிற்சி

### சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. ஞாலம் இச்சொல்லுடன் பொருந்தாத சொல் ..........................................

   (அ) உலகம் (ஆ) வையகம்

   (இ) புவி (ஈ) மலை

2. கீழ்க்காணும் சொற்களுள் மாறுபட்ட பொருள் தருவது ..........................................

   (அ) அறம் (ஆ) தீமை

   (இ) கொடை (ஈ) ஈகை

3. என்பு இச்சொல்லிற்குப் பொருத்தமான சொல் ..........................................

   (அ) முகம் (ஆ) எலும்பு

   (இ) கை (ஈ) கால்

4. அன்பு + இல்லாத இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..................

   (அ) அன்பிலாத (ஆ) அன்பல்லாத

   (இ) அன்பில்லாத (ஈ) அன்புஇல்லாத

5. இன்சொல் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

   (அ) இனிமை + சொல் (ஆ) இன் + சொல்

   (இ) இன்மை + சொல் (ஈ) இனிமை + செல்

## குறட்பாக்களில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுவேன்

| | |
|---|---|
| ஞாலம் | காலம் |
| | |
| | |

## முறைமாறி உள்ள சீர்களை வரிசைப்படுத்தி எழுதுவோம்

இன்சொலன் பணிவுடையன் ஒருவற்கு ஆதல்

பிற மற்றுப் அணியல்ல

தகவிலர் தக்கார் அவரவர் என்பது

படும் எச்சத்தாற் காணப்

www.cbsetamil.com

# வந்த பாதை

## படித்து மகிழ்வோம்
















## ஒத்த ஓசையை உடைய சொல்லைக் கண்டுபிடித்து எழுதுவேன்

ஆணி துள்ளி பெட்டி பந்து

| | | | |
|---|---|---|---|
| வள்ளி செல்வாள் | துள்ளி | சிந்து ஆடினாள் | ________ |
| வேணி சுவரில் அடித்தாள் | ________ | பாட்டி தந்த | ________ |


www.CBSETAMIL.com

## பிடித்த உணவுப்பொருள் குறித்து எழுதுவேன்




**அப்பளம்**

- அப்பளம் எனக்கு மிகவும் பிடிக்கும்
- மொறுமொறு என்று இருக்கும்
- வட்டமாக இருக்கும்
- எளிதில் உடைந்துவிடும்

## கண்டுபிடித்து எழுதுவோம்

| | |
|---|---|
| பெயரில் மரம் உள்ள பறவை | |
| பெயரில் கல் உள்ள உணவு | |
| பெயரில் மை உள்ள தானியம் | |
| பெயரில் கை உள்ள பூ | |



www.cbsetamil.com

# விரல் மரம் செய்வோமா?




www.CBSETAMIL.com

# 19 முடிவெடுப்போமா?


## என் நினைவில்

### படத்தில் ஒளிந்திருப்பவை எவை? கண்டுபிடிப்போம்













### சரியான முடிவைத் தேர்ந்தெடுத்து ✓ குறியிடுவோம்









www.CBSETAMIL.com


## மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடித்து எழுதுவேன்





## புதிருக்கான விடையைக் கண்டறிந்து எழுதுவேன்

- வால் இருக்கும்.
- உயரத்தில் பறக்கும்.
- ஆனால், உயிர் இருக்காது.







- இது ஒருகாய்.
- பச்சை வண்ணத்தில் இருக்கும்.
- கசப்பாக இருக்கும்.





- இது இருக்கும் இடம் காடு.
- நான்கு கால்கள் உண்டு.
- துள்ளி ஓடும்.

## பாடல் அடிகளைத் தொடர்ந்து எழுதுவோம்

அங்கே பார்! இங்கே பார்!
என்ன நடக்குது?
நாயைப் பார்! நாயைப் பார்!
குரைத்துக் காட்டுது!.





அங்கே பார்! இங்கே பார்!
என்ன நடக்குது?
வாத்தைப் பார்! வாத்தைப் பார்!
______________________________

அங்கே பார்! இங்கே பார்!
என்ன நடக்குது?
______________________________
______________________________





______________________________
______________________________
______________________________
______________________________

# 20 தூக்கணாங்குருவியும் ஒட்டகச்சிவிங்கியும்

காட்டில் உள்ள மரத்தின் கிளையில் தூக்கணாங்குருவிக்கூடு ஒன்று இருந்தது. அதில் தூக்கணாங்குருவியும் அதன் குஞ்சுகளும் வாழ்ந்து வந்தன. குஞ்சுகள் கீச்... கீச்... என்று மகிழ்ச்சியுடன் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. அப்போது, அங்கு ஒட்டகச்சிவிங்கி ஒன்று வந்தது.

ஒட்டகச்சிவிங்கி : அப்பாடா, வயிறு நிறைந்துவிட்டது. இந்த மர நிழலில் தூங்கலாம். ஏய்... குருவிக்குஞ்சுகளே... சத்தம் போடாதீர்கள். நான் தூங்க வேண்டும்.

(குருவிக் குஞ்சுகள் மகிழ்ச்சியாக ஒலி எழுப்பிக்கொண்டே இருந்தன. கோபம் கொண்ட ஒட்டகச்சிவிங்கி மரக்கிளையை உலுக்கியது)


தூக்கணாங்குருவி : ஒட்டகச்சிவிங்கியே! ஏன் கிளையை உலுக்குகிறாய்? கூட்டில் குஞ்சுகள் பயப்படுகின்றன.

ஒட்டகச்சிவிங்கி : உன் குஞ்சுகள் சத்தமிடுவது எனக்குப் பிடிக்கவில்லை.

(மீண்டும் கிளையை வேகமாக ஒட்டகச்சிவிங்கி உலுக்கியது. என்ன செய்வது என அறியாமல் தூக்கணாங்குருவி தவித்தது. அருகில் உள்ள குளத்தில் வாழும் தன் நண்பன் தவளையிடம் தன் நிலையைக் கூறியது)

தவளை : ஆமாம். அந்த ஒட்டகச்சிவிங்கி எப்போதுமே பிறரைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அது தண்ணீர் குடிக்க வரும்போது எங்களையும் மிதிப்பதுண்டு.

(அருகிலிருந்த தேனீ இதைக் கேட்டுக்கொண்டிருந்தது)



தேனீ : எங்களின் தேன்கூடு உள்ள மரக்கிளையை இப்படித்தான் ஒட்டகச்சிவிங்கி அடிக்கடி ஆட்டும். சரி போகட்டும் என நாங்கள் விட்டுவிட்டோம். இனி இதை விடக்கூடாது.

(தூக்கணாங்குருவி, தவளை, தேனீ மூன்றும் சேர்ந்து ஒரு திட்டம் தீட்டின. திட்டப்படி தவளையும் அதன் நண்பர்களும் ஆங்காங்கே ஒளிந்து கொண்டார்கள். தேனீக்களும் குருவிகளும் தங்கள் நண்பர்களை அழைத்து வந்தன. அனைத்தும் சத்தமில்லாமல் ஒட்டகச்சிவிங்கியைச் சுற்றி வட்டமிட்டன.


குருவி செய்கை காட்டியவுடன் தவளைகள் கர்ரக்... கர்ரக்..., தேனீக்கள் ஙைஙங்... ஙைஙங்..., குருவிகள் கீச்... கீச்... என ஒலிகளை எழுப்பின. தொடர்ந்து ஒலி எழுப்பிக்கொண்டே இருந்தன. ஒட்டகச்சிவிங்கியால் அதைப் பொறுத்துக்கொள்ளவும் முடியவில்லை; தடுக்கவும் முடியவில்லை)

ஒட்டகச்சிவிங்கி : ஆஆ... ஏன் என்னை இப்படித் தொல்லை செய்கிறீர்கள்?

தேனீ : நீயும் இப்படித்தானே எங்களை அடிக்கடி தொல்லை செய்கிறாய்.

ஒட்டகச்சிவிங்கி : இனி நான் யாரையும் தொல்லை செய்ய மாட்டேன். நீங்களும் செய்ய வேண்டாம்.

தவளை : சரி, நாம் அனைவரும் இனி நண்பர்களாக இருப்போம். அதைக்கேட்ட அனைவரும் மகிழ்ந்தார்கள்.






யாரையும் தொல்லை செய்யாமல் இருப்பது குறித்துக் கலந்துரையாடுங்கள்.

நான் நண்பர்களுடன் இணைந்து செய்த நல்ல செயல்கள்



## பயிற்சி

### சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. மரக்கிளையை உலுக்கியது ...................................................
   (அ) தேனீ (ஆ) ஒட்டகச்சிவிங்கி
   (இ) தவளை (ஈ) சிட்டுக்குருவி
2. மரக்கிளை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................................................
   (அ) மரம் + கிளை (ஆ) மர + கிளை
   (இ) மரத்து + கிளை (ஈ) மரக் + கிளை
3. திட்டம் + படி இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ...................................................
   (அ) திட்டபடி (ஆ) திட்டப்படி
   (இ) திட்டம்படி (ஈ) திட்டுபடி
4. மிதிப்பதுண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................................................
   (அ) மிதிப்பது + உண்டு (ஆ) மிதிப்ப + துண்டு
   (இ) மிதிப்ப + உண்டு (ஈ) மிதி + துண்டு
5. சேர்ந்து என்ற சொல்லின் எதிர்ச்சொல் ...................................................
   (அ) மகிழ்ந்து (ஆ) பிரிந்து
   (இ) இணைந்து (ஈ) சிறந்து

### வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. தூக்கணாங்குருவி தவளையிடம் உதவி கேட்கும்பொழுது அருகில் இருந்தது எது?
2. தூக்கணாங்குருவிக்கு எவையெல்லாம் உதவி செய்தன?
3. கர்ரக்.. கர்ரக்... என ஒலி எழுப்பியது எது?
4. கதையில் பிறரை அடிக்கடி தொல்லைகள் செய்தது எது?

www.cbsetamil.com

## இச்சூழலில் நீ என்ன செய்வாய்? தேர்ந்தெடுத்து ✓ குறியிடுவோம்

**யார் மீதாவது மோதிவிட்டால் ...**

- எதுவும் சொல்லாமல் சென்றுவிடுவேன். ☐
- தெரியாமல் இடித்து விட்டேன் என்று வருத்தம் தெரிவிப்பேன். ☐

**பேருந்து பயணத்தின்போது அலைபேசியில் பாடல் கேட்க நினைத்தால்...**

- அலைபேசியில் சத்தமாக வைத்துக் கேட்பேன். ☐
- எனக்கு மட்டுமே கேட்கும்படி வைத்துக் கேட்பேன். ☐

**எழுதுகோல் இல்லாதபோது என் நண்பர் எனக்கு எழுதுகோல் கொடுத்தால்...**

- திருப்பிக் கொடுத்துவிட்டு நன்றி சொல்வேன். ☐
- திருப்பிக் கொடுக்காமல் நானே வைத்துக் கொள்வேன். ☐

## சொற்றொடரில் வட்டமிட்டு நிரப்புவோம்



- (வா)த்தின் கா(ல்)
- மீண்டும் பாடினான்
- இனிய காலை
- மாங்காய் சாப்பிடு
- புதிய அல்லி



குரங்கிற்கு உள்ளது வால்



நீரில் மட்டும் வாழும் உயிரினம் ________



செடியின் பசுமையான ஒரு பகுதி ________



வீட்டில் வளர்க்கும் விலங்கு ________



காட்டில் வாழும் விலங்கு ________

www.cbsetamil.com

## குருவிக்குப் பொருத்தமான கூட்டை இணைப்பேன்



















## எப்படிச் சொல்லலாம்? தெரிந்து எழுதுவோம்


கலையரசு
சோறு
உண்டான்


பொன்னி
முறுக்கு
தின்றாள்


கண்மணி
மாத்திரை
விழுங்கினாள்


கமலன்
தண்ணீர்
குடித்தான்


டேனியல்
பால் பருகினான்


கரிகாலன்


மலர்



ஆல்வின்


ஜெரினா

## பெயர்களையும் எழுப்பும் ஒலிகளையும் இணைத்து எழுதுவோம்





 அணில் கீச்சிடும் ______________________

 ______________________

 ______________________


 ______________________

 ______________________

______________________ 

______________________ 

______________________ 

______________________ 

______________________ 

# 21 உள்ளங்கையில் ஓர் உலகம்

உலகைச் சுற்றிக் காட்டிடுவேன்
உனக்கு மகிழ்ச்சியைத் தந்திடுவேன்
என்ன வேண்டும் என்றாலும்
எண்ணும் முன்னே சொல்லிடுவேன்

இணைய வழியில் அனைவரையும்
இணைந்தே இருக்கச் செய்திடுவேன்
கடிதம் அனுப்ப வேண்டுமென்றால்
விரைந்தே அனுப்பத் துணைபுரிவேன்

தகவல் களஞ்சியம் நான்தானே
தரணி போற்றி மகிழ்ந்திடுமே
உலகைச் சுருக்கி உன்கையில்
உலவிடும் கணினி நான்தானே

என்றும் ஓய்வு எனக்கில்லை
எதிலும் சோர்வு என்றில்லை
எந்தப் பொருளின் செய்தியையும்
எடுத்துத் தருவேன் ஒருநொடியில்

உள்ளங்கையில் ஓர் உலகம்
உள்ளதைக் காட்டும் கண்ணாடி
என்றே என்னை எல்லாரும்
ஏற்றம் கொண்டே அழைத்திடுவார்

XVZWT



## சொற்பொருள்

தரணி – உலகம்

சோர்வு – களைப்பு

ஏற்றம் – உயர்வு

துணைபுரிவேன்– உதவுவேன்

தகவல் களஞ்சியம் – அனைத்து விவரங்களும் அடங்கியது



சிந்தித்துப் பேசலாமா?

தொலைக்காட்சி, அலைபேசி, கணினி போன்றவற்றைத் தேவையான அளவு பயன்படுத்துதல் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

என் மேடை! என் பேச்சு!

நான் அறிந்த கணினி

www.cbsetamil.com

## அறிந்து கொள்வோம்

- நமக்குத் தேவையான தகவல்களை, படங்களைச் சேமித்து வைக்கக் கணினி உதவுகிறது.
- பொதுஅறிவு, நடனம், ஓவியம், கைவேலைப்பாடு போன்ற பலவற்றையும் இணையவழியில் கற்றுக்கொள்ள முடியும்.
- பாடங்கள் தொடர்பான கூடுதல் தகவல்களை அறிய இணையத்தைப் பயன்படுத்த முடியும்.
- உலகில் தொலைவில் இருக்கும் ஒருவரிடம் கணினி மூலம் அவர்களின் முகம் பார்த்து நேரிடையாகப் பேசிக்கொள்ள முடியும்.
- போக்குவரத்துப் பயணச் சீட்டுகளை எளிதாகப் பதிவு செய்வதற்குக் கணினி உதவுகிறது.

மின்னஞ்சல் மூலம் தகவல்களை அனுப்பலாம்.

புலனம் மூலம் உரையாடிக் கொள்ளலாம்.

முகநூல் மூலம் நமது கருத்துகளைப் பிறரின் பார்வைக்குப் பதிவிடலாம்.

## பயிற்சி

### சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. ஏற்றம் என்ற சொல்லின் பொருள் ........................................

(அ) சோர்வு (ஆ) தாழ்வு

(இ) உயர்வு (ஈ) இறக்கம்

2. என்று + இல்லை இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது. ........................................

(அ) என்றில்லை (ஆ) என்றும்இல்லை

(இ) என்றுஇல்லை (ஈ) என்றல்லை

3. முன்னே என்ற சொல்லின் எதிர்ச்சொல் ........................................

(அ) எதிரே (ஆ) பின்னே

(இ) உயரே (ஈ) கீழே

4. வேறுபட்ட ஒன்று எது? ........................................

(அ) மின்னஞ்சல் (ஆ) புலனம்

(இ) முகநூல் (ஈ) கண்ணாடி

## செயலிகளுக்குப் பொருத்தமான படத்தினை இணைப்போம்




## தொடர்புடைய சொல்லைக் கண்டுபிடித்து எழுதுவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தண்ணீர் | மீன் | ஒற்றைக்கால் | — | கொக்கு |
| 2. | இரவு | வானம் | வட்டம் | — | |
| 3. | மீசை | பால் | மியாவ் | — | |
| 4. | கிளை | நிழல் | பழம் | — | |
| 5. | வீடு | கதவு | பாதுகாப்பு | — | |
| 6. | | பூட்டு | | | வீடு |
| 7. | | | | | கடல் |

# அறிந்து கொள்வோம்

## உயர்திணை

மனிதர்களை உயர்திணை என்று கூறுவர்.

**உயர்திணைப் பெயர்கள்** – மனிதர்களைக் குறிக்கும் அம்மா, அப்பா, அண்ணன், அத்தை, பெரியப்பா, மீனா, ரோசி, பாபு போன்ற பெயர்கள் உயர்திணைப்பெயர்கள் ஆகும்.

## அஃறிணை

மனிதர் அல்லாத உயிருள்ள மற்றும் உயிரற்றவற்றை அஃறிணை என்று கூறுவர்.

**அஃறிணைப் பெயர்கள்** – பூனை, நாய், மாடு, ஆடு, நாற்காலி, மேசை, குடம், மின்விசிறி போன்ற பெயர்கள் அஃறிணைப்பெயர்கள் ஆகும்.

## உயர்திணைக்கு வட்டமிடுவோம்; அஃறிணைக்குக் கட்டமிடுவோம்

நீலா, தன் அத்தை வீட்டிற்குச் சென்றாள். அவளை வரவேற்பது போல நாய்க்குட்டி துள்ளிக்கொண்டு வந்தது. கன்றுக்குட்டி, ஆடு இரண்டும் பேசிக்கொள்வது போல அருகருகே நின்றிருந்தன. செடியில் நிறைய பூக்கள் பூத்திருந்தன. கொய்யாமரம் பழுத்த பழங்களுடன் இருந்தது. மாமா, வா நீலா என்று அவளை வரவேற்றார்.



**நீலா, தன் அத்தை வீட்டில் மேலும் பார்த்த...**

| உயர்திணைப் பெயர்கள் | அஃறிணைப் பெயர்கள் |
| --- | --- |
| பாப்பா | காகம் |

www.cbsetamil.com

# 22 நட்பே உயர்வு

அடர்ந்த காட்டில் முயலும் மானும் நெடுநாள் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. இரண்டு விலங்குகளும் அன்பாய்ப் பழகி வந்தன. மான் பார்ப்பதற்குக் கொழுகொழுவென்று இருந்ததால் எப்படியாவது வேட்டையாடிவிட வேண்டும் என்ற எண்ணம் அங்குள்ள நரிக்குத் தோன்றியது.

ஒருநாள் நரி, பசியோடு இரையைத் தேடிக்கொண்டு வந்தபோது, மான் தனியாக இருப்பதைப் பார்த்தது. நரி, மானின் அருகில் வந்தது. மான் பயந்து ஓடப் பார்த்தது. "நண்பா நில், உன் நண்பன் முயலுக்கு ஆபத்து. நீதான் முயலின் நெருங்கிய நண்பன் ஆயிற்றே, அதனால்தான் உன்னிடம் சொல்ல வந்தேன்" என்றது நரி. "அப்படியா! முயலுக்கு என்ன ஆனது? என்னை உடனே முயலிடம் அழைத்துச் செல்" என்றது மான். அடடா! மான் நம்மிடம் நன்றாகச் சிக்கிக் கொண்டதே என்று மனத்தில் மகிழ்ச்சியுடன் எண்ணியது நரி. இந்த மானை முதலில் நம் இடத்திற்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்று நினைத்த நரி, "வா உன்னை அழைத்துச் செல்கிறேன்" என்று கூறி வேகமாக நடக்கத் தொடங்கியது. மானும் பின்தொடர்ந்தது.

இவர்கள் இருவரும் தொலைவில் வேகவேகமாகச் சென்று கொண்டிருப்பதை மானின் நண்பனான முயல் பார்த்துவிட்டது. நரியுடன் மான் எங்கே செல்கிறது? நம்மிடம் ஒன்றுமே கூறவில்லையே! மான் பதட்டமாகச் செல்கிறதே! நரிதான் எங்கோ அழைத்துச் செல்கிறது! ஒருவேளை இந்த நரி ஏதேனும் ஏமாற்று வேலை செய்து மானை அழைத்துச் செல்கிறதோ? என்ற சந்தேகம் முயலுக்கு எழுந்தது. நரியால் மானுக்கு ஆபத்து நேரப்போகிறது என்ற பயம் முயலுக்கு வந்தது. அதனால் வேகவேகமாக ஓடியது.



முயல் தூரத்தில் வருவதைப் பார்த்துவிட்ட நரி, முயலை மான் பார்த்துவிடாத வண்ணம் பேச்சு கொடுத்தவாறே வேகத்தை அதிகரித்தது. முயல் பலமுறை அழைத்தும் பதட்டத்தில் இருந்த மானின் காதுகளில் அவை விழவே இல்லை. ஏதோ ஆபத்து! இதை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்று நினைத்தது முயல். அதனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடி வந்தது. ஓடி வந்த முயல் எப்படியோ மானின் அருகே வந்துவிட்டது, "மான் நண்பா எங்கே செல்கிறாய்?" என்று கேட்டது. மான் முயலைப் பார்த்தவுடன், அட நம் நண்பன் இங்கே நிற்கிறானே! அவனுக்கு எதுவும் ஆபத்தில்லை போலிருக்கிறதே என்று சிந்தித்தது. சட்டென்று அதற்கு நரியின் திட்டம் புரிந்துவிட்டது.



மானும் முயலும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஒரே நேரத்தில் இருவரும் இரு வேறு திசைகளில் வேகமாக ஓடத் தொடங்கினர். நரி மானைப் பிடிப்பதா? முயலைப் பிடிப்பதா? என்ற குழப்பத்தில் இருவரையும் கோட்டை விட்டது. நண்பர்கள் இருவரும் ஓடித் தப்பித்தனர். இருவரும் தம் நட்பினை எண்ணி மகிழ்ந்தனர்.



**சிந்தித்துப் பேசலாமா?**

எல்லாரிடமும் நட்பாகப் பழகுவது குறித்துக் கலந்துரையாடுங்கள்.

**என் மேடை! என் பேச்சு!**

**எனது நண்பர்**

# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. இரை என்ற சொல்லின் பொருள் ....................................
   - (அ) உணவு
   - (ஆ) இருப்பிடம்
   - (இ) மலை
   - (ஈ) இறைவன்
2. மகிழ்ச்சியுடன் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................................
   - (அ) மகிழ்ச்சி + யுடன்
   - (ஆ) மகிழ்ச்சி + உடன்
   - (இ) மகிழ் + உடன்
   - (ஈ) மகிழ்ச் + சியுடன்
3. தேடிக்கொண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................................
   - (அ) தேடி + கொண்டு
   - (ஆ) தேடி + உண்டு
   - (இ) தேட + கொண்டு
   - (ஈ) தேடு + கொண்டு
4. இங்கே என்ற சொல்லின் எதிர்ச்சொல் ....................................
   - (அ) இடம்
   - (ஆ) காடு
   - (இ) எங்கே
   - (ஈ) அங்கே
5. கதையில் வரும் நண்பர்கள் ...................................., ....................................
   - (அ) முயல், நரி
   - (ஆ) நரி, மான்
   - (இ) மான், முயல்
   - (ஈ) நரி, புலி

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. பசியோடு இருந்தது எது?

2. யாருக்கு ஆபத்து வந்ததாக நரி கூறியது?

3. முயல் தூரத்தில் வருவதைப் பார்த்துவிட்ட நரி என்ன செய்தது?

4. மானும் முயலும் நரியிடமிருந்து தப்பிச் சென்றனவா? எவ்வாறு?

## முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுவேன்

1. நண்பா மான் செல்கிறாய் எங்கே?

_______________________________________________

2. தம் எண்ணி நட்பினை இருவரும் மகிழ்ந்தனர்.


_______________________________________________

3. உன்னை வா செல்கிறேன் அழைத்துச்.

_______________________________________________


## தொடர் உருவாக்கி எழுதுவேன்

மேகம்
காற்று
மழை



மேகம் கருத்தது.
காற்று வீசியது.
மழை பெய்தது.

காகம்
தாகம்
தண்ணீர்



காகம் பறந்தது.
_______________________.
_______________________.

பூ
தேனீ
தேன்



_______________________.
_______________________.
_______________________.

கோழி
தானியம்
முட்டை



_______________________.
_______________________.
_______________________.

www.cbsetamil.com

## படிப்போம்; புரிந்துகொண்டு விடை தருவோம்




1. குழந்தைகள் கலந்துகொள்ளும் விழா எது?

   1. பொங்கல் விழா  2. ஆண்டுவிழா  3. விளையாட்டு விழா

   ① ② ③

2. விழாவில் அனைவரையும் வரவேற்கப்போவது யார்?

   1. முகிலன்  2. யாழினி  3. நிலா

   ① ② ③

3. கதிர் பங்குபெறும் நிகழ்ச்சி எது?

   1. கோலாட்டம்  2. நாடகம்  3. மாறுவேடப்போட்டி

   ① ② ③

4. நாடகத்தில் நடிப்பவர் யார்?

   1. முகிலன்  2. அப்துல்  3. கதிர்

   ① ② ③

5. விழாவில் மாறுவேட நிகழ்ச்சி உண்டா?

   ஆம் / இல்லை (✓செய்க)

**நான் கலந்துகொள்ள விரும்பும் ஒரு நிகழ்ச்சி** ____________


# 23 துணிந்தவர் வெற்றி கொள்வர்




மூன்றாம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு அவர்களின் வகுப்பு ஆசிரியர், ஒரு போட்டியை அறிவித்தார். ஓர் அறையின் நடுவில் பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அந்த அறையினுள் சென்று பெட்டியினைத் தூக்கி வருபவரே வெற்றியாளர் என்பதே அப்போட்டியாகும்.

அனைத்து மாணவர்களும் ஆவலுடன் பெட்டி வைக்கப்பட்டிருந்த அறையினுள் சென்றனர். அறையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த பெட்டி அளவில் பெரியதாக இருந்தது. அதனைக் கண்டவுடன் மாணவர்கள் பலர் தங்களால் அப்பெட்டியினைத் தூக்க இயலாது எனப் போட்டியிலிருந்து விலகிவிட்டனர். மேலும் சிலர், பெட்டிக்கு அருகே சென்று பின்னர் தங்களால் பெட்டியைத் தூக்க இயலவில்லை என்றால் மற்றவர்கள் சிரிப்பார்களே என்று நினைத்துப் போட்டியில் கலந்துகொள்ளாமல் திரும்பிவிட்டனர். கவியரசி என்ற மாணவி மட்டும் முயற்சி செய்து பார்ப்போமே என்று எண்ணி, பெட்டியினை நகர்த்தியபோது பெட்டி எளிதாக நகர்ந்தது. உடனே, அம்மாணவி பெட்டியினை எளிதாகத் தூக்கினாள்.

**கேட்கும்/படிக்கும் கதை, கவிதை, செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வெளிப்படுத்துதல்**



பிற மாணவர்கள் அனைவரும் இதனை வியப்புடன் பார்த்தனர். பின்னர் தயக்கம் விலகி அனைவரும் ஓடிச்சென்று தாங்களும் பெட்டியினைத் தூக்கிப் பார்த்தனர். பெட்டி தூக்குவதற்குச் சுலபமாக இருந்தது.

ஆசிரியர் பிற மாணவர்களிடம் நீங்கள் ஏன் பெட்டியைத் தூக்க முன்வரவில்லை என்று கேட்டார். பெட்டி பெரியதாக இருந்ததால் தூக்க முடியாது என்று நினைத்தோம் என்றனர். கவியரசி நீ ஏன் தூக்கலாம் என முடிவு எடுத்தாய்? என்று ஆசிரியர் கேட்டார். போட்டியே தூக்குவதுதானே? தூக்கிப் பார்க்கலாம்; முடியாவிட்டாலும் பரவாயில்லை முயற்சி செய்யலாம் என்று நினைத்தே தூக்கினேன் என்றாள் கவியரசி.

பிற மாணவர்களைப் பார்த்து இப்போது என்ன நினைக்கிறீர்கள்? என்று ஆசிரியர் கேட்டார். தோல்வியின் அடையாளம் தயக்கம்; வெற்றியின் அடையாளம் முயற்சி என்பதைப் புரிந்து கொண்டோம் என்றனர். அடடா அருமை! நாம் கவியரசிக்குப் பரிசளித்து வாழ்த்தலாமே என்று ஆசிரியர் கூறியதும் வகுப்பறை முழுவதும் கைதட்டல் ஒலி கேட்டது.





சிந்தித்துப் பேசலாமா?

வெற்றி, தோல்வி குறித்து வருத்தப்படாமல் அனைத்துச் செயல்பாடுகளிலும் பங்கேற்பது குறித்துக் கலந்துரையாடுங்கள்.

என் மேடை! என் பேச்சு!

நான் பங்கேற்ற செயல்பாடுகள்


www.CBSETAMIL.com

# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. வகுப்பறை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

(அ) வகுப்பு + அரை (ஆ) வகுப்பு + அறை

(இ) வகு + அறை (ஈ) வகுப் + அறை

2. இயலவில்லை என்ற சொல் உணர்த்தும் பொருள் ........................................

(அ) முடியும் (ஆ) செய்யலாம்

(இ) முடியவில்லை (ஈ) உருவாக்குதல்

3. பெரிய என்ற சொல்லின் எதிர்ச்சொல் ..................................

(அ) சிறிய (ஆ) நிறைய

(இ) அதிகம் (ஈ) எளிய

4. வெற்றி என்ற சொல்லின் எதிர்ச்சொல் ........................................

(அ) சாதனை (ஆ) மகிழ்ச்சி

(இ) நன்மை (ஈ) தோல்வி

5. பரிசளித்து என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

(அ) பரிசு + அளித்து (ஆ) பரி + அளித்து

(இ) பரிசை + அளித்து (ஈ) பரிசும் + அளித்து

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. மாணவர்களுக்கு ஆசிரியர் அறிவித்த போட்டி என்ன?

2. மாணவர்கள் போட்டியில் பங்கேற்காததற்குக் கூறிய காரணம் என்ன?

3. கவியரசியின் வெற்றிக்குக் காரணம் என்ன?

www.cbsetamil.com


## பாடப்பொருளை வரிசைப்படுத்துவோம்

1. இவ்வளவு பெரிய பெட்டியினை நம்மால் தூக்க இயலாது என்றனர் சிலர்.
2. ஆசிரியரும் மாணவரும் கவியரசியைப் பாராட்டினர்.
3. முயற்சி செய்யலாம் என்று நினைத்தே தூக்கினேன் என்றாள் கவியரசி.
4. ஆசிரியர் ஒரு போட்டியினை அறிவித்தார்.
5. அறையின் நடுவே ஒரு பெட்டி இருந்தது.

## பாடல் அடிகளைத் தொடர்ந்து எழுதுவோம்

வேண்டாம் வேண்டாம்
சோறு வேண்டாம்
வேண்டும் வேண்டும்
பழம் வேண்டும்!





வேண்டாம் வேண்டாம்
பாயசம் வேண்டாம்
வேண்டும் வேண்டும்
கரும்பு வேண்டும்!






www.CBSETAMIL.com

PWL7N

## ஒருமை, பன்மை அறிவோமா?

ஒரு பொருளை மட்டும் குறிப்பது **ஒருமை**.
ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது **பன்மை**.

### ஒருமைக்குரிய பன்மைச் சொல்லை எழுதுவோம்



- பந்து ________
- ஆமை ________
- முயல் ________
- பூனை ________



- பூ ________
- விழா ________
- பசு ________
- வினா ________





- படம் ________
- மரம் ________
- சிங்கம் ________
- காகம் ________

- பல் ________
- கல் ________
- சொல் ________
- புல் ________





- முள் ________
- தாள் ________
- ஆள் ________
- வாள் ________

## உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பேன்



பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்தாள் பூமலர். விளையாடுவதற்காகத் தன் தோழி மாலதியின் வீட்டிற்குச் சென்றாள். வழியில் சிறுவர்கள் வேலியில் உள்ள ஓணானை அடிப்பதற்குக் கையில் கல்லோடு குறிபார்த்துக் கொண்டிருந்தனர். பூமலர் அவர்களிடம், "ஓணானை அடிக்காதீர்கள், உங்களை அடித்தால் உங்களுக்கு வலிக்கும் அல்லவா? அதுபோல அதற்கும் வலிக்கும். பிற உயிர்களைத் துன்புறுத்தக்கூடாது அல்லவா?" என்றாள். சற்றே சிந்தித்த அச்சிறுவர்கள், கற்களைக் கீழே போட்டுவிட்டுத் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்தனர்.

**1. பூமலர் தன்தோழியின் வீட்டிற்கு எதற்காகச் சென்றாள்?**

1. படிப்பதற்காக 2. விளையாடுவதற்காக 3. வரைவதற்காக

① ② ③

**2. உங்களை அடித்தால் உங்களுக்கு வலிக்கும் அல்லவா? – இது யார் யாரிடம் கூறியது?**

1. சிறுவர்கள் மாலதியிடம் 2. மாலதி பூமலரிடம் 3. பூமலர் சிறுவர்களிடம்

① ② ③

**3. கவலை என்ற பொருள்தரும் சொல் எது?**

1. வருத்தம் 2. செயல் 3. உயிர்

① ② ③

**4. இவ்வுரைப்பகுதியிலிருந்து நீ அறிந்து கொண்டது என்ன?**

1. உயிர்களைத் துன்புறுத்தல் வேண்டும் 2. ஓணானை வைத்து விளையாடலாம்
3. உயிர்களைத் துன்புறுத்தக்கூடாது

① ② ③

www.cbsetamil.com

# 24 மழைநீர்

மழைநீர் வெள்ளம் ஓடியே
மண்ணில் வீணாய்ச் செல்லுதே
உழைப்பின் வியர்வை போலவே
உயர்வாய் எண்ண வேண்டுமே !

பொன்னும் பொருளும் போலவே
பொழியும் நீரும் செல்வமே
விண்ணின் கொடை என்பதில்
வியப்பு ஒன்றும் இல்லையே !

குளங்கள் ஏரி நிரம்புமே
குருவி கொக்கும் வாழுமே
வானின் அமுதம் சேமித்தே
வாழ்வைச் செம்மை செய்வமே !

நாடும் வீடும் செழிக்கவே
நல்ல தண்ணீர் வேண்டுமே
ஓடும் நீரைத் தேக்கியே
உலகின் பசியைத் தீர்ப்பமே !

உழவும் தொழிலும் ஓங்கவே
உற்ற துணை மழைதானே
வளமும் நலமும் நிறைந்திட
வணங்கி மழையைப் போற்றுவோம்!

மனிதர் பறவை விலங்குகள்
மகிழ்ந்து வாழத்தேவையே
இனிய மழை வரும்போதே
இல்லம் முழுதும் சேமிப்போம் !





சிந்தித்துப் பேசலாமா ?

மழை, தண்ணீரின் முக்கியத்துவம் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

என் மேடை! என் பேச்சு!

மழை எனக்குப் பிடிக்கும். ஏனென்றால்...?


www.CBSETAMIL.com

# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. விண் என்ற சொல்லின் எதிர்ச்சொல் ..................................................

(அ) மண் (ஆ) பொன்

(இ) வானம் (ஈ) மேகம்

2. வானின் அமுதம் இச்சொல் குறிப்பது ..................................................

(அ) அமிழ்தம் (ஆ) அமிர்தம்

(இ) சோறு (ஈ) மழைநீர்

3. மழை + நீர் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..................................................

(அ) மழையின் நீர் (ஆ) மழைனீர்

(இ) மழைநீர் (ஈ) மழைணீர்

4. உயர்வு இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ..................................................

(அ) தாழ்வு (ஆ) உழைப்பு

(இ) வாழ்வு (ஈ) வியப்பு

## அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுவேன்

1. பொழியும் – ________________
2. ஓங்கவே – ________________
3. செம்மை – ________________
4. இல்லம் – ________________

## பொருத்துவேன்

| | | | |
|---|---|---|---|
| 1. | நாடும் வீடும் | – | வேண்டுமே |
| 2. | வளமும் நலமும் | – | சேமிப்போம் |
| 3. | இல்லத்தில் நீரை | – | மழையாகுமே |
| 4. | உற்ற துணை | – | செழிக்கவே |
| 5. | உயர்வாய் எண்ண | – | நிறைந்திட |

www.cbsetamil.com

## ஒரே ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுவேன்

செல்லுதே ஓடியே போலவே வேண்டுமே

________ ________ ________ ________

________ ________ ________ ________

## முதலெழுத்து ஒன்றி வரும் சொற்களை எழுதுவேன்

| | | | |
|---|---|---|---|
| பொன்னும் | பொழியும் | | |
| | | | |

## இரண்டாவது எழுத்து ஒன்றி வரும் சொற்களை எழுதுவேன்

| | | | |
|---|---|---|---|
| மனிதர் | இனிவரும் | | |
| | | | |

## 'உம்' சேர்ந்துவரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுவேன்

பொன்னும் பொருளும் ________ ________

## படித்துப்பார்ப்போம்; எழுதுவோம்



மாடுகள்

இரண்டு மாடுகள்

வயலில் இரண்டு மாடுகள்



பூ

வாடாமல்லி பூ

செடியில் வாடாமல்லி பூ



பாட்டி

என்

சிரிக்கும் என் பாட்டி



வண்ண

மஞ்சள் வண்ண மலர்


## கண்டுபிடித்து எழுதுவேன்; வண்ணமிடுவேன்











## எதிர்ச்சொல் எழுதுவேன்

பனிக்கட்டி குளிர்ச்சியாய் இருக்கும்.
நெருப்பு __________ இருக்கும்.





பூனை மேசையின் மேல் இருந்தது.
எலி மேசையின் __________ இருந்தது.





தங்கை __________ சென்றாள்.
அண்ணன் உள்ளே வந்தான்.





சிறுவன் பேருந்தில் __________
சிறுமி பேருந்திலிருந்து இறங்கினாள்.








### செயல்திட்டம்

உங்கள் ஊரில் காணப்படும் நீர்நிலைகளின் பெயர்களை எழுதி வருக.

## முதலெழுத்து ஒன்றி வரும் சொற்களை எடுத்து எழுதுவேன்

### குட்டி யானை

அழகுக் குட்டி யானை
அசைந்து வரும் யானை
குட்டி வாலை ஆட்டி
குதித்து வரும் யானை
தேங்காய் எங்கே என்று
தேடி வந்த யானை



## இரண்டாம் எழுத்து ஒன்றி வரும் சொற்களை எடுத்து எழுதுவேன்

### சிட்டுக் குருவி

சிட்டுச் சிட்டுக் குருவிக்கு
பட்டுப் பட்டு இறகுகள்
எங்கு பறந்து செல்கிறாய்?
அங்கு நானும் வருகிறேன்!
சின்ன அழகுக் குருவியே
தின்ன எதுவும் வேண்டுமா?
செல்லம் உனக்கு நானுமே
நெல்லை அள்ளித் தருகிறேன்



www.cbsetamil.com

## கட்டத்தில் உள்ள மூலிகைச் செடிகளின் பெயர்களை வட்டமிட்டு எடுத்து எழுதுவோம்


துளசி


கீழாநெல்லி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| து | ள | சி | ன் | ர் | பி | வ் | க |
| வ | ல் | லா | றை | பி | ர | க | ற் |
| கீ | ச் | ற | கெ | த் | ண் | வா | பூ |
| ழா | ந | வ | ன | க் | டை | ற் | ர |
| நெ | ர | வெ | ற் | றி | லை | சா | வ |
| ல் | மெ | யா | ப் | கி | ம் | வ | ள் |
| லி | செ | மை | ழை | றா | ற் | க | ளி |


கற்பூரவள்ளி


வல்லாரை


கற்றாழை


வெற்றிலை


பிரண்டை

## வகைப்படுத்தி எழுதுவோம்











| செடிகள் | கொடிகள் | மரங்கள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

# 25 தமிழ்மொழியின் பெருமை

உலகில் உள்ள மொழிகளுள் மிகவும் தொன்மை வாய்ந்தது தமிழ்மொழி. அமிழ்தினும் இனிய மொழியாக நம் தமிழ்மொழி விளங்குகிறது. 'தமிழ் தமிழ்' என்று சொல்லிப் பாருங்கள், உங்கள் காதில் 'அமிழ்து அமிழ்து' எனத் தேனாய்ப் பாய்வதை உணர்வீர்கள். அதனால்தான்,

**செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்**
**தேன் வந்து பாயுது காதினிலே**

**எனவும்**

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்**

**எனவும்** தமிழைப் போற்றிப் புகழ்கிறார் பாரதியார்.

**தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்**
**தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்**

எனப் பாரதிதாசனாரும் தமிழின் பெருமையைக் கூறுகிறார்.

இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் இணைந்தது முத்தமிழ். இம்மூன்று துறைகளின்கீழ் தமிழ்மொழியின் வெளிப்பாட்டைக் காணலாம்.

எழுத்துநடை வாயிலாக வெளிப்படுவது – இயல்
பாடல்கள் மூலம் வெளிப்படுவது – இசை
அங்க அசைவுகளுடன் வெளிப்படுவது – நாடகம்



பழங்காலத்தில் தமிழர்கள் பயன்படுத்திய மண்பாண்டங்கள், அணிகலன்கள், பண்பாட்டை வெளிப்படுத்தும் ஆடைகள் ஆகியவற்றை அறிந்துகொள்ள அகழாய்வுகள் உதவுகின்றன. அண்மையில் சிவகங்கை மாவட்டத்தில் கீழடி என்னுமிடத்தில் நடைபெற்ற அகழாய்வில் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்மொழி, ஆதித்தமிழர் மொழி என்பது புலப்படுகிறது.

www.cbsetamil.com

கணியன் பூங்குன்றனார் எழுதிய **யாதும் ஊரே, யாவரும் கேளிர்** என்னும் புறநானூற்றுப்பாடல்தொடர்,இன்றளவிலும்ஐக்கிய நாடுகள்அவையில்தமிழ்மொழியின் பெருமையை உலகிற்கு உணர்த்தும்வகையில் சொல்லப்பட்டுள்ளது.

நடுவண் அரசு 12.10.2004ஆம் ஆண்டில் தமிழ்மொழியைப் பிறமொழிகளின் துணையின்றித் தனித்து இயங்கும் திறனுள்ள **செம்மொழி** என அறிவித்தது. இது தமிழ்மொழியின் வளமையை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறது.

தமிழர்களின் வீர விளையாட்டுகளை விளக்கும் பாறை ஓவியங்கள், கல்வெட்டுகளில் காணப்படும் அரசர்களின் கொடை பற்றிய செய்திகள், இலக்கியங்கள் குறிப்பிடும் பண்பாட்டுக் கூறுகள் போன்றவை தமிழர்களின் வீரம், கொடை, பண்பாடு, விருந்தோம்பல் முதலான பண்புகளைத் தெளிவாக விளக்குகின்றன.

**தமிழன் என்று சொல்லடா!**

**தலை நிமிர்ந்து நில்லடா!**

என்னும் பாடல் வரிகள், தமிழர்களின் பெருமையைக் கூறுகின்றன. தமிழர்களின் எழுத்து, சொல், உணர்வு, ஒழுக்கம், வாழ்வு, பண்பாடு ஆகியவற்றைத் தமிழின் தொன்மையான இலக்கணநூலான தொல்காப்பியம் எடுத்துக் கூறுகிறது. உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சிறப்புப் பெற்று விளங்கும் நூல், திருக்குறள். உலகப் பொதுமறை என்று அழைக்கப்படும் இந்நூலில் தமிழரின் வாழ்வியல் நெறிகள் சொல்லப்பட்டுள்ளன.

தமிழ்மொழியின் சிறப்பை உணர்ந்த அயல்நாட்டார் பலரும் தமிழை விரும்பிக் கற்றுக் கொண்டதோடு, தமிழில் பல இலக்கண, இலக்கியங்களையும் படைத்துள்ளனர். திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்தவர், ஜி. யு. போப். இவர், ஆங்கிலத்தில் திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார். தம்மைத் **தமிழ் மாணவன்** என்றே உலகோர் அறியச்செய்தார்.

நம் தாய்மொழியான தமிழ், ஈராயிரம் ஆண்டுகளுக்குமேல் பேச்சிலும் எழுத்திலும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. நாளும் பொலிவுடன் வளர்தமிழாய் தன் பெருமையை உலக அரங்கில் நிலைநிறுத்தி வருகிறது. நம் தமிழ்மொழியை உலகில் உள்ளோர் பாராட்டும்வகையில் மென்மேலும் உயர்த்த உறுதுணையாக இருப்போம்.



**சிந்தித்துப் பேசலாமா?**

- தாய்மொழியில் பேசுவதைவிட பிற மொழியில் பேசுவதுதான் பெருமை என்ற எண்ணம் தவறானது. தேவைக்கேற்ப பிற மொழியையும் கற்கலாம்.
- தாய்மொழியே சிந்திக்கும் திறனை வளர்க்கும்.

ஆகியன குறித்துக் கலந்துரையாடுங்கள்.

**எனக்குப் பிடித்த தமிழ்ப் பாடல்**



# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. தமிழுக்கும் அமுதென்று பேர் என்று பாடியவர் ..........................................
   அ) பாரதியார் ஆ) கண்ணதாசன்
   இ) கவிமணி ஈ) பாரதிதாசன்

2. செம்மை + மொழி இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....................................
   அ) செம்மொழி ஆ) செம்மொலி இ) செம்மொளி ஈ) செமொழி

3. கீழடி அகழாய்வு நடந்த மாவட்டம் ....................................
   அ) புதுக்கோட்டை ஆ) தருமபுரி இ) சிவகங்கை ஈ) திருச்சி

4. ஆதித்தமிழர் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................................
   அ) ஆதி + தமிழர் ஆ) ஆதி + தமிளர் இ) அதி + தமிழர் ஈ) ஆதீ + தமிழர்

5. பொலிவு இச்சொல்லுக்குரிய பொருள் ....................................
   அ) மெலிவு ஆ) குறைவு இ) துணிவு ஈ) சிறப்பு

## சரி (✓) தவறு (✗) எனக் குறியிடுவேன்

1. இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் இணைந்தது முத்தமிழ். [ ]
2. தமிழ்மொழி 'ஆதித்தமிழர் மொழி'. [ ]
3. 'வீரம்' தமிழரின் பண்புகளுள் ஒன்று. [ ]
4. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் தொடர் ஆத்திசூடியில் உள்ளது. [ ]
5. சிவகங்கையிலுள்ள கீழடியில் அகழாய்வு நடைபெறவில்லை. [ ]

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. தமிழ்மொழியின் பெருமைகளுள் இரண்டு எழுதுக.

2. கீழடி அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் யாவை?

3. தமிழரின் பெருமையைக் கணியன் பூங்குன்றனார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

4. தமிழின் தொன்மையான இலக்கண நூல் எது?

5. தமிழ்மொழி பற்றி நீவிர் அறிந்த கருத்தை எழுதுக.

www.cbsetamil.com

## அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுவேன்

தொன்மை – ____________

அகழாய்வு – ____________

கேளிர் – ____________

பொலிவு – ____________

## சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து நிரப்புவேன்

கை சை நை

இசை

ப ள ட

நா ___கம்

பா___

ணை றை நை

___ழடி

நீ சீ கீ

## அறிந்து கொள்வோம்

லிங்குவா என்பது இலத்தீன் மொழிச்சொல். இச்சொல் மூலம் லாங்வேஜ் என்ற சொல் தோன்றியது. இதனைத் தமிழில் நாம் 'மொழி' என அழைக்கிறோம்.


www.CBSETAMIL.com

## சரியான சொல்லைத் தெரிவு செய்து, சொற்றொடர் உருவாக்குவோம்

1. இயல் என்பது [ஓவியம் / எழுத்து / பேச்சு] நடை.

இயல் என்பது, எழுத்து நடை

2. பாறை ஓவியங்களில் தமிழர்களின் [பொழுது போக்கு / நடிப்பு / வீரவிளையாட்டு] பற்றிய செய்திகள் உள்ளன.

3. பிறமொழி உதவி இல்லாமல் தனித்து இயங்குவதால், தமிழ்மொழி [தென்மொழி / செல்வமொழி / செம்மொழி] ஆகும்.

4. நடுவண் அரசு தமிழைச் 'செம்மொழி' என [2006 / 2001 / 2004] ஆம் ஆண்டு அறிவித்தது.

# 26 அறிவூட்டும் தொலைக்காட்சி செய்திகள்

ஒருநாள் மாலைப்பொழுது இளவரசி, பூங்குழலி இருவரும் பள்ளி முடிந்து வீடு திரும்பினர். அப்பொழுது வானில் வானூர்தி ஒன்று பறந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் கருமேகங்கள் சூழ்ந்து பேரொலியுடன் இடிஇடிக்கத் தொடங்கியது. அச்சமயம் பெய்த மழைத்தூறல், இளவரசியையும் பூங்குழலியையும் நனைத்தது.

**இளவரசி** நாம் வீட்டிற்குச் செல்வதற்குள் முழுவதுமாக நனைந்துவிடுவோம்போல் இருக்கிறதே! அதோ, அந்தக் கடையில் சிறிதுநேரம் நின்றுவிட்டு, மழைவிட்டதும் செல்வோமா?

**பூங்குழலி** சரி, இந்த வானூர்திகள் மழையில்கூட வானில் பறக்கின்றனவே. அவற்றின் பாதையை இந்தக் கருமேகங்கள் மறைக்காதா?

**இளவரசி** மறைக்காது, ஏனெனில், வானூர்திகள் கருமேகங்களைத் தாண்டி உயரத்தில் பறக்கின்றன.

**பூங்குழலி** அது எப்படி உனக்குத் தெரியும்?

**இளவரசி** தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இதுபற்றி விரிவாகக் கூறினார்கள்.

**பூங்குழலி** அப்படியா? தொலைக்காட்சியில் இதுபற்றியெல்லாம் சொல்கிறார்களா?

**இளவரசி** ஆம். பார்ப்பதற்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. விமானம் உயரத்தில் பறக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. புயல், மேகமூட்டம், இடி, மழை போன்றவற்றால் அதன் பயணம் பாதிக்கப்படுவதில்லை என்பதைக் குறும்படம் மூலம் விளக்கினார்கள்.



www.cbsetamil.com



**பூங்குழலி** கேட்பதற்கே வியப்பாக இருக்கிறதே! மழை, தூறலாகத்தான் இருக்கிறது. பேசிக்கொண்டே செல்வோமா?

**இளவரசி** கொஞ்சம் பொறு, பூங்குழலி. இடிச்சத்தம் காதைப் பிளக்கிறது.

**பூங்குழலி** இடிதானே இடிக்கிறது. மழை, பெரிதாகப் பெய்யவில்லையே, மழை வந்தால் மரத்தடியில் ஒதுங்கி நின்று விடலாமே!

**இளவரசி** இல்லை பூங்குழலி! மரத்தடியில் நின்றால், இடிதாக்கி உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதைத் தொலைக்காட்சிச் செய்தியில் பார்த்திருக்கிறேன்.

**பூங்குழலி** ஓ! சரி, சரி. வேறு என்னவெல்லாம் நீ தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறாய்?

**இளவரசி** பொம்மைப் படங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள், செய்து பார்ப்போம் போன்ற ஏராளமான நிகழ்ச்சிகளைக்கூடப் பார்த்திருக்கிறேன்.

**பூங்குழலி** தொலைக்காட்சி என்றாலே திரைப்படம், பாடல்கள், நாடகத் தொடர்கள் போன்றவற்றையே பார்ப்பேன். ஆனால், நீ கூறியதுபோல் புதிய செய்திகளை அறிந்துகொள்ள தொலைக்காட்சி உதவும் என்பதை இப்போது புரிந்துகொண்டேன். இனி, நானும் பார்த்துப் பயனடைவேன்.

**இளவரசி** மகிழ்ச்சி. இனி, நாள்தோறும் புதுப்புதுச் செய்திகளைத் தோழிகளுக்கு நாம் இருவருமே சொல்லலாம். சரி, இப்போது மழை நின்றுவிட்டது; வா வீட்டுக்குப் போகலாம்.




தொலைக்காட்சியில் வரும் பயனுள்ள நிகழ்ச்சிகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

தொலைக்காட்சியிலிருந்து நான் தெரிந்து கொண்டவை



# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. வானூர்தி பறப்பது பற்றிய செய்தியை ...................................... வாயிலாக இளவரசி அறிந்து கொண்டாள்.

அ) கணினி
ஆ) தொலைக்காட்சி
இ) வானொலி
ஈ) அலைபேசி

2. ஆர்வம் இச்சொல்லின் பொருள் ......................................

அ) வெறுப்பு
ஆ) மறுப்பு
இ) மகிழ்ச்சி
ஈ) விருப்பம்

3. உயரம் என்ற சொல்லின் எதிர்ச்சொல் ......................................

அ) குட்டை
ஆ) நீளம்
இ) நெட்டை
ஈ) நீண்ட

4. தொலைக்காட்சி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................................

அ) தொலை + காட்சி
ஆ) தொல்லை + காட்சி
இ) தொலைக்+ காட்சி
ஈ) தொல் + காட்சி

5. புயல், மேகமூட்டம், இடி, மழை போன்றவற்றால் எதன் பயணம் பாதிக்கப்படுவதில்லை என்பதைக் குறும்படம் விளக்கியது? ......................................

அ) பேருந்து
ஆ) வானூர்தி
இ) மகிழுந்து
ஈ) மிதிவண்டி

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. பூங்குழலியும் இளவரசியும் வானத்தில் எதைக் கண்டனர்?

2. இடி, மழை வந்தால் மரத்தடியில் ஒதுங்கி நிற்க கூடாது ஏன்?

3. இளவரசி, தொலைக்காட்சியில் என்னவெல்லாம் பார்த்ததாகக் கூறினாள்?


www.CBSETAMIL.com

## கதையைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பேன்



தவளை ஒன்று மிகவும் உடல்நலம் குன்றியிருந்தது. அதன் குட்டி, தன் தாயைக் காப்பாற்ற நினைத்தது. மாலைநேரம் முடிவதற்குள் மலைமேல் ஏறி, மூலிகை கொண்டுவர நினைத்தது. அந்த மலையில் ஏராளமான பாம்புகள் வாழ்ந்து வந்தன. பாம்புகளால் தனக்குத் தீங்கு நேரிடும் என்று நினைத்தது குட்டித் தவளை. தன் அறிவைப் பயன்படுத்திச் சென்றால்தான் மாலைக்குள் திரும்ப முடியும் என்று நினைத்தது. மலையில் ஏறத் தொடங்கியதும், அந்தக் குட்டித் தவளை பேசத் தொடங்கியது. "முன்னே செல்லும் பருந்தாரே! பின்னே பெரிய கீரியார் மெல்ல வருகிறார். சற்று பொறுத்தே செல்லுங்கள்" என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே சென்றது. பாம்புகள், குட்டித் தவளை கூறுவதைக் கேட்டு ஓடி ஒளிந்துகொண்டன. குட்டித் தவளை, தன் கூர்சிந்தனைத்திறனால் காலம் கடத்தாமல் விரைந்து சென்று, மூலிகையைப் பறித்துக் கொண்டுவந்து தன் தாயைக் காப்பாற்றியது.

**1. உடல்நலம் குன்றிய நிலையில் இருந்தது எது?**

1. தாய்த் தவளை  2. பருந்து  3. குட்டித் தவளை

① ② ③

**2. குட்டித் தவளை, தனக்கு யாரால் தீங்கு ஏற்படும் என நினைத்தது?**

1. பாம்பு  2. கீரி  3. தவளை

① ② ③

**3. குட்டித் தவளை தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, எந்தெந்தப் பெயர்களைக் கூறியது?**

1. பருந்து, பாம்பு  2. கீரி, மலை  3. பருந்து, கீரி

① ② ③

**4. குறித்த நேரத்திற்குள் ஒரு செயலைச் செய்து முடிப்பது எதைக் குறிக்கும்?**

1. பணிவு  2. காலந்தவறாமை  3. நேர்மை

① ② ③

# 27 நல்வழி




## பாடல் பொருள்

ஆற்றில் நீர் வற்றியதால், அதன் வறண்ட மணல்பகுதி, வெப்பத்தால் சூடேறி நடப்பவரின் பாதங்களைச் சுடும். அத்தகைய நிலையிலும் அந்த ஆற்று மணலைத் தோண்டுகின்றபோது, சுரக்கின்ற ஊற்றானது உலக மக்களுக்கு உணவாய் அமையும். அதுபோல, நல்ல குடிப்பிறப்பில் தோன்றியவர்கள், வறுமைநிலையில் வாடினாலும், தம்மிடம் வந்து பொருள் தருக எனக் கேட்பவர்க்கு இல்லை எனக்கூறாது, ஒப்புக்கொண்டு தம்மால் முடிந்தவரை கொடுத்து உதவுவார்கள்.

## நூல் குறிப்பு

வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல நெறிகளைக் கூறுவது, நல்வழி. இந்நூலை இயற்றியவர், ஒளவையார். இந்நூலில் கடவுள் வாழ்த்தோடு மொத்தம் 41 வெண்பாக்கள் அமைந்துள்ளன.

www.cbsetamil.com

# பயிற்சி

## சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. உலகூட்டும் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................
   (அ) உல + கூட்டும் (ஆ) உலகு + கூட்டும்
   (இ) உலகு + ஊட்டும் (ஈ) உலகூட்டு + உம்

2. அந்நாளும் என்ற சொல்லின் பொருள் ........................................
   (அ) வேறொரு நாளும் (ஆ) அடுத்த நாளும்
   (இ) அத்தகைய நிலையிலும் (ஈ) எப்போதும்

3. இசைந்து இச்சொல்லின் பொருள் ........................................
   (அ) மறுத்து (ஆ) பாடி
   (இ) ஒப்புக்கொண்டு (ஈ) உதவி

## வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. நல்வழி என்னும் நூலை எழுதியவர் யார்?

2. உலக மக்களுக்கு உணவாய் அமைவது எது?

3. நல்ல குடிப்பிறந்தாரின் இயல்பு எத்தகையது?

## இரண்டாம் எழுத்தை மாற்றிப் புதிய சொல் உருவாக்குவேன்

| படம் | நலம் | உதவு | பத்து | குயில் |
|---|---|---|---|---|
| பழம் | ______ | ______ | ______ | ______ |
| பணம் | | | | |
| பதம் | | | | |

www.cbsetamil.com

## பட விளக்க அகரமுதலி

| | |
|---|---|
|  | **பனிக்கரடி**<br>இது உறைபனி சூழ்ந்த ஆர்டிக் பகுதியில் காணப்படும். இது நீரிலும் நிலத்திலும் வேட்டையாடவல்லது. இதனைத் துருவக்கரடி எனவும் கூறுவர். |
|  | **பால்**<br>சத்துமிக்க ஓர் உணவு. இதில் கால்சியம், பொட்டாசியம், புரதம் போன்ற சத்துகள் அடங்கியுள்ளன. உலகளவில் மிகுதியாகப் பால் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா விளங்குகிறது. |
|  | **பிண்ணாக்கு**<br>தேங்காய், எள், கடலை போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுத்தபின் மிஞ்சும் சக்கையே பிண்ணாக்கு. இது விலங்குகளுக்கு உணவாகப் பயன்படுகிறது. |
|  | **பீர்க்கங்காய்**<br>நார்ச்சத்துமிக்க காய்களுள் ஒன்று. இது தோல் நோயைக் குணப்படுத்தும். இது உடலுக்கு நல்லது. |
|  | **புறா**<br>முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவைகளுள் ஒன்று. இப்பறவைகள் குச்சிகள், குப்பைகள் போன்றவற்றைக் கொண்டு கூடு கட்டுகின்றன. இவை, தானிய வகைகளை இரையாக உட்கொள்கின்றன. |
|  | **பூண்டு**<br>மருத்துவப் பயன்மிக்க ஓர் உணவுப்பொருள். இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் குறைக்கக் கூடியது. |


www.CBSETAMIL.com

www.cbsetamil.com


| | |
|---|---|
|  | **பெங்குயின்**<br>குளிர் மிகுந்த பகுதிகளில் வாழும். இது பறவை இனத்தைச் சார்ந்தது. ஆனால் இதனால் பறக்க முடியாது. மனிதர் நடப்பதுபோல இதன் நடை அமைந்திருக்கும். நீரில் நன்றாக நீந்திச் செல்லும். |
|  | **பேரிச்சம்பழம்**<br>இது பனைவகையைச் சார்ந்தது. இது மருத்துவக் குணம் உடையது. இதில் இரும்புச்சத்து இருப்பதால், இரத்தசோகையை நீக்கும். |
|  | **பை**<br>இது பொருள்களை எடுத்துச் செல்ல உதவுகிறது. துணி முதலான பொருள்களைக்கொண்டு உருவாக்கப்படுகின்றது. பல வண்ணங்களில் சந்தையில் கிடைக்கிறது. |
|  | **பொங்கல் விழா**<br>இவ்விழா, தைமாதம் முதல்நாள் கொண்டாடப்படுகிறது. உணவுப் பொருள்களை விளைவிக்க உதவுவது இயற்கை. அதற்கு நன்றி செலுத்தும்வகையில் இதனைக் கொண்டாடுகின்றனர். |
|  | **போர்வாள்**<br>பண்டைக் காலத்தில் மன்னர்கள் பயன்படுத்திய படைக்கருவிகளுள் ஒன்று. போரிடும் காலங்களில், வீரர்கள் இக்கருவியைப் பயன்படுத்துவர். |
|  | **பௌவம்**<br>கடலைக் குறிக்கும் ஒரு சொல், பௌவம். பூமியின் பெரும்பகுதி கடலாலேயே சூழப்பட்டுள்ளது. கடல் நீர் உப்புகரிக்கும். கடல் நமக்கு மீன், சிப்பி, நண்டு, முத்து, பவளம் முதலான வளங்களைத் தருகிறது. |


www.CBSETAMIL.com

www.cbsetamil.com

## செய்து மகிழலாம்





www.CBSETAMIL.com

# வந்த பாதை

## படத்தைப் பார்த்து ஐந்து தொடர்கள் எழுதுவேன்



## படித்து விடை எழுதுவோம்




| | | |
|---|---|---|
| 1 | ஜானிடம் பேசியது யார்? | |
| 2 | நந்தா எங்கே விளையாடுகிறான்? | |
| 3 | கயல் எங்கே செல்கிறாள்? | |
| 4 | நூலகத்திற்குப் பொருத்தமான தொடர் எது? | |

அ) வேகத்தடை உள்ளது ஆ) அமைதி காக்கவும் இ) பூக்களைப் பறிக்காதீர்

## படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடையளிப்பேன்




1. பள்ளி அமைந்துள்ள ஊர் எது?
   1. கணக்கனூர்
   2. குப்பனூர்
   3. கணக்கன் குப்பம்

   (1) (2) (3)

2. பள்ளியில் என்ன போட்டி நடைபெறுகிறது?
   1. ஓட்டப்போட்டி
   2. கால்பந்து போட்டி
   3. கபடி போட்டி

   (1) (2) (3)

3. எத்தனை சிறுவர்கள் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டுள்ளனர்?
   1. மூன்று
   2. நான்கு
   3. இரண்டு

   (1) (2) (3)

4. போட்டியில் இரண்டாவதாக ஓடி வருவது யார்?
   1. அன்வர்
   2. பீட்டர்
   3. வசந்தி

   (1) (2) (3)

5. குழந்தைகள் எதில் ஓடுகின்றனர்?
   1. ஓட்டப்பாதை
   2. நடைபாதை
   3. சாலை

   (1) (2) (3)

6. ஆசிரியர் கையில் வைத்திருப்பது என்ன ?
   1. கடிகாரம்
   2. ஊதல்
   3. கைத்தடி

   (1) (2) (3)

www.cbsetamil.com

# என் பக்கம்

## எனக்குப் பிடித்த வண்ணம்



## எனக்குப் பிடித்த விலங்கு / பறவை

ஏன் என்றால்...

## எனக்குப் பிடித்த விளையாட்டு

ஏன் என்றால்...

## என் குடும்பம்



www.CBSETAMIL.com

www.cbsetamil.com

## கதை / பாடல் உருவாக்குவேன்



## எனக்குப் பிடித்த நாள்

_____ / _____ / __________

ஏன் என்றால்...

## நான் செய்த உதவி

www.CBSETAMIL.com

www.cbsetamil.com

## என்னுடைய பொழுதுபோக்கு







## நான் விரும்பும் இடம் / பயணம்

ஏன் என்றால்...



## என்னை மகிழ்ச்சிப்படுத்துவது

ஏன் என்றால்...



www.CBSETAMIL.com

www.cbsetamil.com

# அகரமுதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அகழாய்வு | – | நிலத்தைத் தோண்டி ஆராய்தல் |
| 2. | ஆணவம் | – | பிறரை மதிக்காத தன்மை |
| 3. | ஆதி | – | முதல் |
| 4. | ஆபரணம் | – | அணிகலன் |
| 5. | ஆர்வம் | – | விருப்பம் |
| 6. | ஆவல் | – | விருப்பம் |
| 7. | ஆனந்தம் | – | மகிழ்ச்சி |
| 8. | இசைந்து | – | ஒப்புக்கொண்டு |
| 9. | இயலவில்லை | – | முடியவில்லை |
| 10. | இரவாது | – | பிறரிடம் கேட்டுப் பெறாது |
| 11. | இரை | – | உணவு |
| 12. | இல்லம் | – | வீடு |
| 13. | இளைப்பாறி | – | ஓய்வெடுத்தல் |
| 14. | ஈதல் | – | கொடுத்தல் |
| 15. | ஈராயிரம் | – | இரண்டாயிரம் |
| 16. | உரைத்தல் | – | கூறுதல் |
| 17. | உலுக்கியது | – | அசைத்து ஆட்டியது |
| 18. | எழில் | – | அழகு |
| 19. | என்பு | – | எலும்பு |
| 20. | ஒலி | – | சத்தம் |
| 21. | ஒளி | – | வெளிச்சம் |
| 22. | ஓங்கவே | – | வளரவே |
| 23. | கண்டுகளிக்க | – | பார்த்து மகிழ்தல் |
| 24. | கதிரவன் | – | சூரியன் |
| 25. | களிப்பு | – | மகிழ்ச்சி |




www.CBSETAMIL.com

www.cbsetamil.com

# அகரமுதலி

| | | | |
|---|---|---|---|
| 26. | காலை | – | விடியல் பொழுது |
| 27. | குறிக்கோள் | – | நோக்கம் |
| 28. | கேளிர் | – | உறவினர் |
| 29. | சுதந்திரம் | – | விடுதலை |
| 30. | செம்மை | – | சிறப்பு |
| 31. | சேகரித்தல் | – | ஒன்று திரட்டுதல் |
| 32. | சேர்த்தல் | – | இணைத்தல் |
| 33. | ஞாலம் | – | உலகம் |
| 34. | தகவல் | – | செய்தி |
| 35. | தொன்மை | – | பழைமை |
| 36. | நித்திலம் | – | முத்து |
| 37. | நிபந்தனை | – | கட்டளை |
| 38. | நீராடி | – | குளித்து |
| 39. | நூல் | – | புத்தகம் |
| 40. | பகைவர்கள் | – | எதிரிகள் |
| 41. | பணி | – | வேலை |
| 42. | பழுது பார்த்தல் | – | சரிசெய்தல் |
| 43. | பேரொலி | – | மிகுந்த ஒலி |
| 44. | பொலிவு | – | சிறப்பு |
| 45. | பொழியும் | – | பெய்யும் |
| 46. | மிக்கார் | – | அறிவில் மேம்பட்டவர் |
| 47. | மௌனம் | – | அமைதி |
| 48. | வளமை | – | வளம் |
| 49. | விதவிதமான | – | வகைவகையான |
| 50. | விவசாயி | – | உழவர் |




www.CBSETAMIL.com

www.cbsetamil.com

## கற்றல் விளைவுகள்

| கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|
| • கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களையும் கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொள்வர். அவற்றின் மீதான கருத்தினை/நோக்கினை வெளிப்படுத்துவர்.<br>• தம்மைச்சுற்றி நடைபெறும் உரையாடல்களையும் விவரிப்புகளையும் கேட்டுப் புரிந்துகொள்வர்.<br>• வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்வர்.<br>• வானொலி/ தொலைக்காட்சி செய்திகளைக் கேட்டுப் புரிந்துகொள்வர். | • அறிந்த/கேட்ட கதைகளைக் கலவைத்தொடரில் பேசுவர்.<br>• பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர்.<br>• கேட்டுணர்ந்த கதைகள், கதைப்பாடல்களின் தலைப்புகள், கதை மாந்தர்கள் பற்றி வினாக்கள் கேட்டும் கருத்தாடல் செய்தும் கருத்துகளை வெளிப்படுத்துவர்.<br>• தமக்கு அறிமுகமான செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும் தங்குதடையின்றியும் விவரித்துக் கூறுவர்.<br>• கேட்கும்/படிக்கும் கதை, கவிதை, செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர்.<br>• பண்புடன் உரையாடுவர். | • தெளிவான ஒலிப்புடன் குறில் – நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படிப்பர்.<br>• எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படிப்பர்.<br>• முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய நிறுத்தக்குறிகளை அறிந்து படிப்பர்.<br>• மூன்று அல்லது நான்கு தொடர்களைக் கொண்ட சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• சூழல் சார்ந்த புதிய சொற்களின் பொருள் புரிந்து படிப்பர்.<br>• படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு பிறகு அவற்றின் சரியான பொருளை அறிந்து பயன்படுத்துவர்.<br>• படிக்கும் பகுதியில் இடம்பெறும் பெயர்ச்சொல், வினைச்சொல் பதிலிப் பெயர்ச்சொல் போன்ற நுட்பங்களைப் புரிந்து படிப்பர்.<br>• கதை/செய்யுள்களில் உள்ள மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொள்வர், மாற்றி அமைப்பர். | • உரிய வடிவத்தில் முறையான இடைவெளிவிட்டு எழுதுவர்.<br>• சொற்கள்/தொடர்கள்/ செய்தி/ உரைப்பகுதி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து கருத்து தெரிவிப்பர், கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர்.<br>• புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுவர்.<br>• அறிந்த சொற்களைக் கொண்டு, தமக்கான நடையில், நிறுத்தக் குறியீடுகள், எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு தொடர்கள் எழுதுவர்.<br>• சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்துத் தொடர் அமைப்பு, நடை போன்றவற்றை மாற்றியமைத்து எழுதுவர்.<br>• கதை, பாடல்களைப் புரிந்துகொண்டு நீட்டித்து எழுதுவர். |

| நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல் | கற்கக் கற்கும் திறன்கள் (தானே கற்றல்) | சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும் |
|---|---|---|
| • உயர்திணை, அஃறிணை அறிந்து பயன்படுத்துவர்.<br>• எழுத்து வகைகள், இன எழுத்துகளை அறிந்து பயன்படுத்துவர்.<br>• ஒருமை, பன்மை வேறுபாடு அறிந்து பயன்படுத்துவர்.<br>• பெயர்ச்சொல், வினைச்சொல், பதிலிப் பெயர்ச் சொற்கள் அறிந்து பயன்படுத்துவர்.<br>• மயங்கொலிச் சொற்களின் வேறுபாடு அறிந்து பயன்படுத்துவர்.<br>• ஒத்த ஓசைச் சொற்கள் அறிவர். | • சிறுவர்களுக்கான படவிளக்க அகரமுதலியைப் பயன்படுத்துவர்.<br>• கணினியில் குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகளை விளையாடி மகிழ்வர்.<br>• படக்கதைகளைத் தேடிப் படிப்பர். | கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.<br>• உணவுப் பொருள்களின் பெயர்கள்<br>• ஆடை வகைகளின் பெயர்கள்<br>• மரம், செடி கொடிகளின் பெயர்கள்<br>• பொது இடங்களின் பெயர்கள் (பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், மருத்துவமனை)<br>• தன் ஊர், மாவட்டம், மாநிலம், நாடு ஆகியவற்றின் பெயர்கள்<br>• பழமொழிகள், மரபுத் தொடர்கள்<br>• சிறுவர்களுக்கான படக்கதைகள்<br>• சொல் விளையாட்டுகள்<br>• பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு வேறுபாடுகள் |

| படைப்புத் திறன்கள் | விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல் | வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுதல் |
|---|---|---|
| • ஒரே எழுத்தில் தொடங்கும்/முடியும் பல்வேறு சொற்களை உருவாக்க அறிந்துகொள்வர்.<br>• கதையைத் தொடர்ந்து கூறிமுடிப்பர்.<br>• அறிந்த சொற்களைக் கொண்டு தன் சொந்த நடையில் கொடுக்கப்பட்ட தலைப்புகளுக்கு ஏற்ப எழுதுவர்.<br>• சொல் விளையாட்டுகளில் பங்கேற்பர்.<br>• பாடலைப் படித்துப் புரிந்துகொண்டு புதிய தொடர்களை / பாடல் வரிகளை உருவாக்குவர். | • காலம் தவிர்க்காமை<br>• தூய்மை பேணுதல்<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்பு உணர்வு<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>போன்ற பண்புகளைப் பின்பற்றுவர். | • தன்னை அறியும் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத்திறன்<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• இணக்கமான உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன்<br>போன்றவற்றை உணர்ந்தறிந்து செயல்படுவர். |

www.cbsetamil.com

## தமிழ் – மூன்றாம் வகுப்பு
## நூல் ஆக்கம்

### கல்வி ஆலோசகர்

**முனைவர். பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

### மேலாய்வாளர்கள்

**திருமதி ஆ.சே.பத்மாவதி,எழுத்தாளர்,**
சென்னை.

**திருமதி பா. மலர்விழி,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர்.

**திரு சி. பன்னீர்செல்வம்,**
கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை.

**திரு இல. சீனிவாசன்,** முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலும் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

### ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர். கா.சா. மொழியரசி,** முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

**திரு ந. இராமலிங்கம்,** உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**தே.விமலா தேவி,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை

### கலை மற்றும் வடிவமைப்புக்குழு

#### பக்க வடிவமைப்பு

சந்தோஷ்குமார் சக்திவேல்

#### வரைபடம்

**கா. தனஸ் தீபக் ராஜன்**
**கா. நலன் நான்சி ராஜன்**
**ரா.ஷாலினி**
**வை.மை.பிராங்க் டஃப்**
**மதன் கங்காதரன்**
**பா. ரவிகுமார்,**
**வேல்முருகன்**
**பா. பிரமோத்**
**செ. ரமேஷ்குமார்.**

#### தரக்கட்டுப்பாடு

**ராஜேஷ் தங்கப்பன்**

**கி. ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ் ப**

**காமாட்சிபாலன் ஆறுமுகம்**

### பாடநூல் உருவாக்கக் குழு

**திருமதி அர. அனுசுயா தேவி,** இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையம்பாளையம்,
விழுப்புரம் மாவட்டம்.

**திருமதி பெ. முருகராணி,** இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர்,
பெரம்பலூர் மாவட்டம்.

**திருமதி க. மல்லிகா,** தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர்,
திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

**திரு. பா.ச. குப்பன்,** இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யன்தாங்கல்,
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

**திரு. ஆ. மாணிக்கம்,** இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, ஆலங்குடி,
அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை.

**திருமதி. ந. பரிமளா,** தலைமைஆசிரியர்,
அம்பத்தூர் நகராட்சித் தொடக்கப் பள்ளி, வரதராஜபுரம்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

**திரு. வெ. பாலமுருகன்,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரம்பாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**திரு. ந. மாமலைவாசன்,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
இராயபுரம், திருவாரூர் மாவட்டம்.

**திரு. வெ. ராஜா,** இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. ந.நி. பள்ளி இராக்கியாம்பட்டி,
கொங்கணாபுரம், சேலம்.

**திருமதி பி கற்பகம்** இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, ஐயப்பா நகர், வில்லிவாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்

**திரு. கு. மனத்துணைநாதன்,** இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, கீழ்வேளூர், நாகப்பட்டினம்.

**திரு. பெ. கார்த்திகேயன்,** இடைநிலை ஆசிரியர்
ஊ. ஒ. தொ. பள்ளி, சிங்கிலியன் கோம்பை,
நாமகிரிப் பேட்டை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்

#### EMIS தொழில்நுட்பக் குழு

**இரா.மா.சதீஸ்**
மாநில ஒருங்கிணைப்பாளர் தொழில்நுட்பம்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.
**இரா. அருண் மாருதி செல்வன்,**
தொழில்நுட்ப திட்டபணி ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.
**க. ப. சத்தியநாராயணா,**
தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

#### அட்டை வடிவமைப்பு

**கதிர் ஆறுமுகம்**

#### வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்

**ரமேஷ் முனிசாமி**

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:


www.CBSETAMIL.com